பாவை - பள்ளிஎழுச்சிமாலை



வெளியீடு

தங்கபஸ்பம் நா.ஆ.மாரிமுத்து

உ

சிவமயம்

பாவை–பள்ளிஎழுச்சி மாலை

குறிப்புரை

ரா. பத்மநாபன்

வெளியீடு

தங்கபஸ்பம் - நா. ஆ. மாரிமுத்து

காரைக்குடி

உள்ளுறை

	பக்கம்
பதிப்புரை	௩
நூல்முகம்	ரு
திருப்பாவை	1—15
திருவெம்பாவை	19—28
திருப்பள்ளி எழுச்சி (சிவன்)	29—33
திருப்பள்ளி எழுச்சி (திருமால்)	37—41
திருவேங்கடவன் மாலே (ஸுப்ரபாதம்–தமிழ்க் கவியாக்கம்)	45—67
பாட்டு முதற்குறிப்பு	69—71

பதிப்புரை

தெய்வத் தமிழ் மணக்கும் தமிழ்நாட்டில் நெடுங் காலந் தொட்டே பக்தி நலம் பரவுதற்குப் பல நூல்கள் எழுந்துள்ளன. சைவ, வைணவச் சமயங்கள் தமிழ் நாட்டின் ஆன்மீக வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றி யுள்ளன. நாட்டில் அமைதியும், அன்பும் இணைந்து வளரச் செய்வதுதான் சமயத் தொண்டு என்பர். அத் தகைய தொண்டைச் செய்த சமயத் தொண்டர்கள் ஆழ்வார்களாகவும், நாயன்மார்களாகவும், பெருமை யுடன், விளங்கினர். அந்த வரிசையில் வைணவ சமயத் தில் சிறந்து விளங்கிய ஆண்டாளின் திருப்பாவையும், சைவ சமயத்தில் உயர்ந்து விளங்கிய மாணிக்கவாசக ரின் திருவெம்பாவையும், இந்நூலில் முதல்வரிசையில் இடம்பெறுகின்றன. அடுத்து, சிவனையும், திருமாலையும் முதலாகக்கொண்ட திருப்பள்ளி எழுச்சிகளும், இறுதியில் வடமொழி வேங்கடேச சுப்ரபாதத்தின் தமிழ்க் கவியாக்கமாகிய திருவேங்கடவன் மாலையும் இடம் பெறுகின்றன.

தமிழ் அன்பரும், சுழற்குழு உறுப்பினரும் காரைக்குடி அழகப்பா கல்லூரித் தமிழ் விரிவுரையாளரு மாகிய திரு. இராம. இராமநாதன் அவர்களுடைய தூண்டுதலினாலேயே இந்நூலை நான் வெளியிடும் பேறு பெற்றேன். அவருடைய தொண்டு நினைவில் நிற்கத் தகுந்தது.

இந்நூலைத் தொகுத்துக் குறிப்புரை எழுதியவர் திரு. ரா. பத்மநாபன் அவர்கள்; வள்ளல் அழகப்பருடன் மிக நெருங்கிப் பழகியவர்; அவர்பால் மிக்க பக்தி பூண்ட வர். அழகப்பர் பொறியியல் கல்லூரியில் பணி புரிபவர். தமிழ்க்கடல் ராய. சொ. அவர்களின் மாணவர். இந்த பக்தி நூல்களைச் செம்மையுடன் எல்லோருக்கும் புரியும் வகையில் தொகுத்துக் குறிப்புரை எழுதியுள்ளார்கள்.

அவர்களின் பணியைச் சமய உலகம் பாராட்டக் கடமைப்பட்டது.

தெய்வத் தமிழ்ப் பாமாலை நூலுக்கு ஏற்ற வண்ணம் பக்திநலம் பரவும் வகையில் முகப்பு ஓவியம் வரைந்து உதவிய அழகப்பா பொறியியற் கல்லூரி மாணவர் திரு. ஜி. மூர்த்தி பாராட்டிற்குரியவர். அவருக்கு நன்றி கூறி வாழ்த்துகின்றேன்.

என் அருமைத் தந்தையார் எப்பொழுதும் திருநீறு அணிந்து பொலிவுடன் விளங்கும் இயல்புடையவர். அவருடைய ஆன்மீக உணர்வும் கொடை நலமும் அனைவரும் அறிந்ததொன்றாகும். என் அருமைத் தந்தையாரின் நினைவைப் போற்றும்வகையில் எளியேன் இந்தப் "பாவை-பள்ளி எழுச்சி மாலை" நூலை வெளியிட்டு மனநிறைவு பெறுகின்றேன். இந்நூலைப் பயிலும் அனைவரும் எல்லா நலமும் பெற்று இனிது வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

இந்த அழகிய நூலை மிகக் குறுகிய காலத்தில் பொலிவுடன் திகழுமாறு அச்சியற்றித்தந்த சவுத் இந்தியா பிரஸ், திரு. சுப்பையா அவர்கள் பாராட்டிற்குரியவர். அச்சகத்தார்க்கும், அவருக்கும் என் நன்றி உரியது.

14—1—1971
காரைக்குடி 3

அன்பன்
நா. ஆ. மாரிமுத்து

ஸ்ரீராமஜெயம்

நூல்முகம்

ஆண்டவன் மீதான அளவற்ற பத்திப்பெருக்கினுல், அவனுக்கு வைகறைப்பாமாலே சூட்டி, துயிலுணர்த்தி, பரவசப்பட்ட பத்தமணிகள் பலப்பலர். அவர்களுள், மாதங்களில் சிறந்த மார்கழி மாதத்தில் பாடும் "திருப்பாவை," "திருவெம்பாவை," "திருப்பள்ளி எழுச்சிகள்" முறையே அருளிய, ஆண்டாள், மாணிக்க வாசகர், தொண்டரடிப்பொடி ஆழ்வார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். அவ் அருளிச் செயல்களில் நுகரப்பெறும் இலக்கிய-பத்திச்சுவை முதலியன நினை தொறும், பேசும்தொறும், பாடும்தொறும் மிக்க இன்பம் சுரப்பவை. 'பயில்தொறும் நூல்நயம்' என்ற வள்ளுவனு ரின் பொன்மொழிக்கு ஏற்ற எடுத்துக் காட்டுகளாக அவை அமைந்துள்ளன. அண்மைக் காலமாக, இவற்றின் சிறப்புணர்ந்து, மக்கள் பெருமளவில் இவற்றை ஓதிப் பயன் துய்க்கிருர்கள்; பாவை மாநாடுகள் பல்வேறு கோணங்களில் கொண் டாடப்பெறுகின்றன. இவையெல்லாம் பெரிதும் மகிழ்ச் சிக்குரியவை. பரந்து விரிந்த ஆழ்கடலின் தன்மைகளேத் தன்னகத்தே கொண்ட இவ்அரிய படைப்புக்களின் சிறப்பு இயல்புகளே, அவரவர் தங்கள் தங்கள் அறி வாற்றல், விளக்க நூற்பயிற்சி இவற்றின் துணேக் கொண்டு, நன்கு விரித்து இன்பம் துய்க்கலாம்.

ஆண்டவன் புகழ்மணக்கும் "திருப்பாவை," "திருவெம்பாவை," "திருப்பள்ளி எழுச்சி" (2) ஆகிய நான்கினேடும், திருப்பதியில் கோயில்கொண்டுள்ள திருவேங்கடவன் திருமுன்பு நாளும் வைகறைப்போதில் பாடப்பெறும், புகழ்மிக்க, ஸ்ரீ வேங்கடேசஸுப்ர

பாதத்தின் தமிழ்க் கவியாக்கமாகிய, "திருவேங்கடவன் மாலை" என்ற பாடல்கள் இந்நூலின் ஐந்தாவது பகுதியாக அமைக்கப்பெற்றுள்ளன. "ஸ்ரீ வேங்கடேச ஸுப்ரபாதம்" 500 ஆண்டுகளுக்கு முன்னர், ஸ்ரீபிரதி வாதிபயங்கரம் அண்ணன் என்ற மஹானால் ஆக்கப் பெற்றது. சுலோகங்களின் சொல்லோசை வடமொழி யறியாதோரையும் தன்பால் ஈர்க்கும் தன்மையது. அத் தெய்விகப்படைப்பில் கொழிக்கும் நயங்களை யாவரும் ஒருவாறு அறிந்து இன்புறுவான்வேண்டி, எளியேன் அதனைத் தமிழ்க்கவியாக்கம் செய்துள்ளேன். இம் முயற்சியை, ஸ்ரீ காஞ்சி ஜகதாசார்ய பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய சுவாமிகள், "தமிழ்ப்பா நிபந்தனை களுக்குக் கட்டுப்பட்டு சுவைக்கேடு ஆகாமே ஆக்கி யிருக்கும் அழகு தனிச்சிறப்புடைத்து" என ஆசி செய்துள்ளார்கள். அதனைப் பெரும்பேருகக் கருது கிறேன்.

இங்ஙனம் ஐந்து வைகறைப்பாடல் தொகுதிகளைக் கொண்டு வெளிவரும் இந்நூலுக்கு, "பாவை—பள்ளி எழுச்சி மாலை" எனப் பெயர் சூட்டப்பெற்றுள்ளது.

எழில்மிக்க மூவண்ணத்தில் ஆண்டாள், நடராசர், மணிவாசகர், அரங்கநாதன், திருவேங்கடமுடையான், அலர்மேல்மங்கைத்தாயார், ஆகிய ஐந்து படங்கள் நூலின் பொலிவுக்கு ஏற்றம் தருகின்றன.

இந் நூலினை தம் தந்தையாரின் நினைவாஞ்சலியாக வெளியிட்டு நலம்பெறுபவர் காரைக்குடி 'தங்கபஸ்பம்' மாரிமுத்து ஆவார். அவரது தந்தையார் திரு. ஆறுமுகம்பிள்ளை அவர்கள் தெய்வ பத்தி, எளிமை, கருணை, இரக்கம், கொடைநலம் முதலிய நற்பண்புகள் பல உடையவர் என்பதை அனைவரும் அறிவர். தம்

திறமைமிக்க நிருவாகத்தில் நாள்தொறும் தொழில் துறையில் மேலோங்கியவர்; முயற்சி திருவினை ஆக்கும் என்ற தமிழ்மறையின் இலக்கணமாகத் திகழ்ந்தவர்.

பொருள்நலம், புகழ்நலம் அமைந்தவரின் மறைவிற்குப்பின் அவர் மக்கள் அவ்வாறே அமைவர் என்பது பெரும்பாலும் இல்லை. ஆனால் தந்தையாரின் அடிச்சுவட்டை ஒற்றியும், இன்னும் சிறப்பாகவும் செயல்படும் திறமையும், நற்பண்பும் இணைந்திருப்பதை, திரு. ஆறுமுகம்பிள்ளை அவர்களின் மைந்தர் திரு. நா. ஆ. மாரிமுத்து அவர்களிடம் காண்கிறோம். எந்த நல்ல பணிக்கும் இல்லை எனாது வழங்கும் மனப்பாங்குடையவர்; பொதுப்பணி நிறுவனங்கள் பலவற்றின் தலைவர்; எதையும் எழிலுறவும் சிறப்பாகவும் செய்யும் கலை அறிவும் ஆற்றலும் மிக்கவர்; தாம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களோடு ஒன்றிவிடும் மனப்பான்மை கொண்டவர். இன்னும் பல பண்பியல்புகள்கொண்ட திரு. மாரிமுத்து அவர்கள், பெருஞ் செலவைப்பாராது இந்நூலினை வெளியிடுவது மிகவும் பாராட்டத்தக்கது.

இம்மாதிரி நூல் வெளியீட்டுப்பணியில் என்னைப் பழக்கிய என் ஆசிரியர் தமிழ்க்கடல், சிவமணி, சிவம் பெருக்கும் சீலர், வண்கவி வள்ளல் ராய.சொ. அவர்களை நெஞ்சார நினைவது என் முதற் கடமையாகும்.

இந்நூலினை ஒட்டிய பணிகளில் எல்லா நிலைகளிலும் ஒன்றிய மனத்தொடு, என் அருமை நண்பர், அழகப்பா கல்லூரி, தமிழ் விரிவுரையாளர் இராம. இராமனாதன் அவர்கள் ஆற்றிய உதவிகள் மிகப்பெரிது. அவற்றிற்காக அன்னாருக்கு என் உளங்கனிந்த நன்றியும், வாழ்த்தும்.

2587

அ

அழகப்பா கல்லூரி, தமிழ் விரிவுரையாளர் கவிஞர் கோ. பூ. அமிர்தலிங்கனார் அவர்கள் அவ்வப்போது தமது அரிய பணியினை உவகையுடன் உதவினார்கள். அவர்களுக்கும் என் நன்றி.

தெய்வநலம் கொழிக்கும் இந்நூலினை வழங்கும் திரு. நா. ஆ. மாரிமுத்து அவர்களும், அவர்கள் குடும்பத்தாரும், பல்லாண்டு பல்லாண்டு வாழ்க! இதனைப் பயில்வோர், பண்பும் பயனும் பெற்று வாழப் பல்லாண்டு கூறுகிறேன். வாழ்க!

அழகப்பாபுரம்,
காரைக்குடி.
14—1—1971

ரா. பத்மநாபன்.

தொழிலதிபன், ஆறுமுகத்
தூயமனச் சான்ருேன்!
எழிலொழுக ஈத்துவக்கும்
இன்பன்!—வழிவழியாய்
வாழ்வாங்கு வாழ
வழிவகுத்தான் நற்புகழ்தான்
ஏழிசைபோல் வாழ்க இனிது!

காரை நகரில்
கடும்உழைப்பால் மேலோங்கி
மாரியென வாழ்ந்த
மனச்செல்வன்!—பார்போற்றும்
"தங்கபஸ்பம்" கண்டு
தருந்த கொடைசெய்தே
மங்காச்சீர் கொண்டான் மகிழ்ந்து!



1. திருப்பாவை

ஆண்டாள்


அருளியது.

தனியன்

அன்ன வயற்புதுவை
ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப்
பல்பதியம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள், நற்
பாமாலை; பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

சூடிக் கொடுத்த
சுடர்க்கொடியே! தொல்பாவை
பாடி அருளவல்ல
பல்வளையாய்!—நாடிநீ
'வேங்கடவற்கு என்னை
விதி' என்ற இம்மாற்றம்
நாம்கடவா வண்ணமே நல்கு.

—உய்யக்கொண்டார்.



ஆண்டாள்

1. திருப்பாவை

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்,
நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்,
ஏர்ஆர்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்,
நாரா யணனே, நமக்கே பறைதருவான்;
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்! 1

வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ; பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்உண்ணோம்; பால்உண்ணோம்; நாட்காலே நீராடி,
மையிட்டு எழுதோம்; மலர்இட்டு நாம்முடியோம்;
செய்யா தனசெய்யோம்; தீக்குறளை சென்றுஓதோம்;
ஐயமும் பிச்சையும் ஆம்தனையும் கைகாட்டி,
உய்யுமாறு எண்ணி உகந்தேலோர் எம்பாவாய்! 2

திங்கள்: மாதம். மதிநிறைந்த நன்னாள்: பௌர்ணமியாகிய நல்லநாள். போதுவீர்: விருப்பம் உடையவர்களே. போதுமினோ:வாருங்கள். நேரிழையீர்: அழகிய ஆபரணங்களை அணிந்துள்ளவர்களே. சீர்:செல்வம். மல்கும்:நிறைந்துள்ள. கூர்: கூர்மையான. குமரன்: புதல்வன் (கண்ணன்) ஏர்ஆர்ந்தகண்ணி: அழகுநிறைந்த கண்களையுடைய. இளஞ்சிங்கம்: சிங்கக்குட்டி. கார்மேனி: மேகத்தை ஒத்ததிருமேனி. கதிர்: சூரியன். மதியம்; சந்திரன். பறை: நோன்பிற்குரிய பறை. படிந்து; நோன்பில் இறங்கி. ஏலோர்எம்பாவாய்: இத்தொடர் மொழிக்குத் தனித்தனிப் பொருளாகவும் மகுடமாகவும் பொருள் கூறுவர். 1

வையம்: பூமி. பாவை: பாவைநோன்பு. கிரிசை: கிரியை. பையத்துயின்ற: மெல்லக்கண்வளருகின்ற. (யோகநித்திரைசெய்கின்ற) அடி: திருவடிகள். நாட்காலை: விடியற்காலம். மையிட்டு: கண்களுக்குமையிட்டு. எழுதோம்; அழகு செய்யோம் மலர்இட்டு முடியோம்: கூந்தலைப் பூச்சூட்டி முடிக்க மாட்டோம். செய்யாதன: பெரியோர்கள் செய்யாதவற்றை. தீக்குறளை: பிறர்க்குத் தீமை தரும் கோள்சொல். சென்று: (கண்ணனிடம்) போய். ஐயம்: தானம். ஆம்தனையும்: இயன்றவரையிலும். கைகாட்டி: (நாம்கொடுத்தோம் என்ற செருக்கின்றி) கொடுத்து. ஆறு: வகை. உகந்து: மகிழ்ந்து. 2

ஓங்கி உலகுஅளந்த உத்தமன் பேர்பாடி,
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்,
தீங்குஇன்றி நாடுஎல்லாம் திங்கள்மும் மாரிபெய்து,
ஓங்கு பெரும்செந்நெல் ஊடு கயல்உகள,
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்குஇருந்து சீர்த்த முலைபற்றி,
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்! 3

ஆழி மழைக்கண்ணா! ஒன்றும்நீ கைகரவேல்;
ஆழியுள் புக்கு, முகந்துகொடு, ஆர்த்துஏறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து,
பாழிஅம் தோள்உடைப் பற்மநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றுஅதிர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழிநீர் ஆட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்! 4

ஓங்கி: (மகாபலி வார்த்தநீர் கையில் விழுந்ததுமே) ஆகாயமளவும் வளர்ந்து. உத்தமன்; புருஷோத்தமனாகிய பெருமான். பாவைக்கு: பாவை நோன்புக்கு. சாற்றி: சொல்லி. செந்நெல் ஊடு: செந்நெற் பயிர்களின் நடுவே. கயல்: கயல்மீன். உகள: துள்ள. பூ: அழகிய. போது: மலர். பொறி: புள்ளி. கண்படுப்ப: உறங்க. தேங்காதே: சலியாமல். புக்கு இருந்து: (கறக்க) புகுந்து ஒருநிலையாக இருந்து. சீர்த்த: பால் நிரம்பிய. வாங்க: இழுக்க. நாட்டின் செல்வச்செழிப்பும், இயற்கை வளமும் அருமையான பாடலோவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. 3

ஆழிமழைக்கண்ணா: கடல்போல் கம்பீரமான மழைக்குரிய தேவதையே. கைகரவேல்: ஒளித்துவைத்துக்கொள்ளாதே. ஆர்த்து: ஆரவாரம் செய்து. ஊழிமுதல்வன் உருவம்போல்: காலம் முதலிய எல்லாவற்றுக்கும் முதற் காரணனான எம்பெருமானது திருமேனிபோல். பாழிஅம்தோளுடை: வலிமை பொருந்திய அழகிய தோள்களையுடைய. ஆழி: சக்கரம். வலம்புரி: வலம்புரிச்சங்கு. அதிர்ந்து: இடித்து. சார்ங்கம்: சார்ங்கம் என்னும் எம்பெருமான் திருக்கையிலுள்ள வில். தாழாதே: தாமதியாமல். மழையையும் கண்ணன் கருணையையும் கலந்து பாடியுள்ள கவிநயம் சிந்தனைக்கு ஒரு விருந்து. 4

மாயனை, மன்னு வடமதுரை மைந்தனை,
தூய பெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனை,
தூயோம்ஆய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது,
வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசுஆகும்; செப்பேலோர் எம்பாவாய்! 5

புள்ளும் சிலம்பினகாண்; புள்அரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேர்அரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய்! பேய்முலை நஞ்சுண்டு,
கள்ளச் சகடம் கலக்குஅழியக் கால்ஓச்சி,
வெள்ளத்து அரவில் துயில்அமர்ந்த வித்தினை,
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரிஎன்ற பேர்அரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்! 6

மாயனை: கண்ணனை. மன்னு: நிலைபெற்ற. வடமதுரை மைந்தனை: வடமதுரையில் அவதரித்தவனாகிய தலைவனை. தூயபெருநீர்: தூய்மையான வெள்ளம். யமுனைத்துறைவனை: யமுனாதீரவாசியை. அணி: அழகு. குடல் விளக்கம்செய்த: பெற்ற வயிற்றுக்கு மேன்மை உண்டாக்கிய தாமோதரனை: கண்ணபிரானை. தூமலர்: தூயமலர். போயபிழை. முன்புசெய்த பாவங்கள். புகுதருவான் நின்றனவும்: இனிமேல் நம்மையறியாமல் நேரிடத்தக்க பாவங்களும். தூசு: பஞ்சு. செப்பு: சொல்வாயாக. 5

புள்ளும் சிலம்பின: பறவைகளும் கூவத்தொடங்கின. புள்அரையன்: பறவைகளுக்கு அரசனான கருடன். கோ; ஸர்வேச்வரன். இல்: சன்னிதியில். விளிசங்கு: எல்லோரையும் கூவியழைக்கின்ற சங்கு பேரரவம்: பேரொலி. பேய்: (இங்கே) பூதனையாகிய அரக்கி. கள்ளச்சகடம் கலக்கு அழிய: கள்ளத்தனமாக அசுர ஆவேசம் கொண்டுவந்த (சகடாசுரன்) வண்டியானது கட்டுக்குலைந்து சிதற. கால்ஓச்சி: காலால் ஓங்கி உதைத்து. வெள்ளத்து அரவில்: திருப்பாற் கடல் வெள்ளத்தில் திருவனந்தாழ்வான்மீது. வித்தினை: விதையாகிய பகவானை. (இதுமுதல் பத்துப்பாசுரங்கள் எழுந்தவர்கள் எழுந்திராதவர்களை எழுப்புவது) 6

"கீசுகீசு" என்றுஎங்கும் ஆனைச்சாத் தன், கலந்து
பேசின பேச்சுஅரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து,
வாச நறும்குழல் ஆய்ச்சியர், மத்தினால்
ஓசை படுத்த தயிர்அரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாரா யணன்மூர்த்தி,
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?
தேசம் உடையாய்! திறவேலோர் எம்பாவாய்! 7

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண்; மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமல் காத்துஉன்னைக்
கூவுவான் வந்துநின்றோம்; கோது கலம்உடைய
பாவாய்! எழுந்திராய்; பாடிப் பறைகொண்டு,
மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்,
ஆவாஎன்று ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்! 8

கீசுகீசு என்று: கீச்சுக் கீச்சென்று. ஆனைச்சாத்தன்: பரத்வாஜபட்சி எனப் படும் வலியன். அரவம்: (ஆரவாரமாகிய) ஒலி. பேய்ப்பெண்ணே: மதிகெட்ட பெண்ணே. காசு: கழுத்தில் அணிந்துள்ள அச்சுத்தாலி. பிறப்பு: ஆமைத் தாலி. கலகலப்ப: கலகல என்று ஒலிக்கும்படி. கைபேர்த்து: கைகளை முன் பின்னாக மாற்றி அசைத்து. வாசம்: நறுமணம். மத்தினால் ஓசைபடுத்த: மத்தால் (தயிர்) கடையும். நாயகப்பெண்பிள்ளாய்: பெண்களுக்கெல்லாம் தலைமையாயிருப்பவளே. கிடத்தியோ: உறங்குவாயோ. தேசம்: மிக்கஒளி. 7

வெள்ளென்று: வெளுத்திருக்க. சிறுவீடு: சிறிதுநேரம் அவிழ்த்துவிடப்பட்ட மேய்வான்: பனிப்புல் மேய்கைக்காக: மிக்குள்ள: மிகுதியாகவுள்ள பிள்ளைகள். பெண்பிள்ளைகள். கோதுகலமுடைய பாவாய்: கண்ணனால் கொண்டாடப் பெறும் அழகிய பெண்ணே. மாவாய். குதிரை வடிவமான கேசி என்னும் அசுரனது வாயை மல்லர்: (கண்ணனைக் கொல்லக் கம்சனால் ஏவப்பட்ட) இரு மல்லர்கள். மாட்டிய: மாளச்செய்த. ஆவா என்று: ஐயோ என்று இரங்கி. ஆராந்து: குறைகளை விசாரித்து 8

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய,
தூபம் கமழத் துயில்அணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்!
மாமீர்! அவளை எழுப்பீரோ; உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன், மாதவன், வைகுந்தன் என்றுஎன்று
நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய்! 9

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ, வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி நாரா யணன்,நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால், பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய்! 10

தூமணிமாடத்து: தூய்மையான மாணிக்கங்கள் அழுத்தி ஆக்கப்பட்ட மாளிகையில். சுற்றும்: நாற்புறமும். கமழ: மணம்வீச. கதவம்: கதவு. தாள்: தாழ்ப்பாள். அனந்தலோ: பேருறக்கம் உடையவளாய் இருக்கின்றாளோ. ஏமப்பெருந்துயில்: எழுந்திருக்கமுடியாத பெருந்தூக்கம். மந்திரம்: மந்திர வாதம். நவின்று: சொல்வதால். தோழிகளின் அன்பும் பரிகாசமும் உரிமை கொழிக்க இப்பாடலில் வெளிவருகின்றன 9

நோற்று: நோன்பு நோற்று (கண்ணனின் இன்பத்துக்காக). மாற்றம்: பதில் வார்த்தை. நாற்றத்துழாய்: நறுமணமுள்ள திருத்துளசி புண்ணியன்: புண்ணியமூர்த்தி பண்டொருநாள்: முன்னொரு காலத்தில். கூற்றம்: எமன். தந்தானோ: கொடுத்துவிட்டுப்போய் விட்டானோ. ஆற்ற அனந்தல்: மிக்க தூக்கம். அருங்கலமே: கிடைத்தற்கரிய ஆபரணமாக எங்களுக்கு வாய்த்திருப்பவளே. தேற்றமாய்: தெளிவுடன் இராமபிரான் பரசுராமனை வென்று வில்லை வாங்கிக்கொண்டதுபோல் இவள் கும்பகர்ணனை வென்று தூக்கத்தை வாங்கிக் கொண்டாள்! 10

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து,
செற்றார் திறல்அழியச் சென்று செருச்செய்யும்
குற்றம்ஒன்று இல்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றுஅரவு அல்குல் புனமயிலே! போதராய்;
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்து,நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட,
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டி,நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோர் எம்பாவாய்! 11

கனைத்துஇளம் கற்றுஎருமை, கன்றுக்கு இரங்கி,
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்து,இல்லம் சேறுஆக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழ,நின் வாசல்கடை பற்றி,
சினத்தினால் தென்இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கு இனியானைப் பாடவும்நீ வாய்திறவாய்;
இனித்தான் எழுந்திராய்; ஈதென்ன பேர்உறக்கம்?
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோர் எம்பாவாய்! 12

கற்றுக் கறவை: கன்றுகளோடு கூடிய கறவைப் பசுக்கள். கணங்கள்: கூட்டங்கள். செற்றார்; பகைவர். திறல்; வலிமை. சென்று: தாமே படையெடுத்துச் சென்று. செரு: போர். கோவலர்: இடையர்கள். பொற்கொடி: பொன்கொடி போன்றவளே. அரவு: பாம்பு. புனமயிலே. காட்டில் வாழும் மயிலின் சாயலை உடையவளே. போதராய்: எழுந்து வாராய். முற்றம்: முன்வாசல். முகில் வண்ணன்: கார்மேக வண்ணனான கண்ணபிரான். சிற்றாது: அசையாமல். எற்றுக்கு உறங்கும் பொருள்: என்னபயன் கருதியோ, உறங்குகின்ற இச்செய்கை. 11

கனைத்து இளங் கற்று எருமை: இளங் கன்றுகளுடைய எருமைகள் (பால் கறப்பார் இல்லாமையால் முலை கடுத்து) கதறிக்கொண்டு. நின்று பால் சோர: இடைவிடாமல் பால் சொரிய. இல்லம்: வீடு. நற்செல்வன் தங்காய்: சிறந்த செல்வத்தையுடையவன் தங்கையே. பனி தலைவீழ: எங்கள் தலையில் பனிவிழ. வாசல் கடை பற்றி: தலைவாசலைப் பற்றிக் கொண்டு. சினம்: கோபம். செற்ற: அழித்த. அறிந்து: அறிந்த பின்னும். 12

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்,
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்;
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று;
புள்ளும் சிலம்பினகாண்; போதுஅரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்துநீர் ஆடாதே,
பள்ளிக் கிடத்தியோ, பாவாய்!நீ, நல்நாளால்;
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோர் எம்பாவாய்! 13

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்,
தங்கள் திருக்கோயில் சங்குஇடுவான் போதந்தார்;
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாஉடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய்! 14

புள்ளின்வாய் கீண்டானை: பறவையின் உருவத்தோடு வந்த பகாசுரனுடைய வாயைப் பிளந்து எறிந்தவனாகிய கண்ணனை. பொல்லா அரக்கன்: பொல்லாங்கு செய்த இராவணன். கிள்ளிக்களைந்தானை: (பத்துத்தலைகளையும்) மிகவும் எளிதாகக் கிள்ளி எறிந்து வம்சநாசம் செய்த பெருமானை. கீர்த்திமை: புகழ்கூறும் விரசரிதம். பாவைக்களம்: பாவைநோன்பு நோற்கும் இடம். வெள்ளி எழுந்து: சுக்கிரன் தோன்றி. வியாழம் உறங்கிற்று: வியாழன் மறைந்துவிட்டது. புள்: பறவை. சிலம்பின: கூவிக்கொண்டு போயின. போது அரிக்கண்ணினாய்: தாமரைப் பூவையும் மானையும் ஒத்த கண்ணழகு வாய்ந்தவளே. கள்ளம் தவிர்ந்து; கள்ளத்தனத்தைவிட்டு. 13

புழைக்கடை: விட்டின்பின்புறம். வாவி: தடாகம். வாய்நெகிழ்ந்து: மலர்ந்து. கூம்பின: குவிந்தன. செங்கல் பொடிக்கூறை: காவிப்பொடியில் தோய்த்த காஷாய உடை. தவத்தவர்: துறவிகள். தங்கள் திருக்கோயில் சங்கிடுவான்: தமது திருக்கோயில்களைத் திறவு கோலிட்டுத் திறக்கைக்காக. நாணாதாய்: வெட்கமில்லாதவளே. ஏந்தும்: தரிக்கும். தடக்கையான்: பெரியகைகளை யுடையவன். பங்கயக்கண்ணான்: தாமரைபோன்ற கண்களையுடைய கண்ணபிரான். 14

எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?
''சில்''என்று அழையேன்மின், நங்கைமீர்! போதர்கின்றேன்;
'வல்லை,உன் கட்டுரைகள் பண்டேஉன் வாய்அறிதும்;'
'வல்லீர்கள் நீங்களே, நானேதான் ஆயிடுக;'
'ஒல்லைநீ போதாய், உனக்கென்ன வேறுஉடையை;'
''எல்லாரும் போந்தாரோ?'' ''போந்தார்,போந்து எண்ணிக்கொள்''
வல்ஆனை கொன்றானை; மாற்றாரை மாற்றுஅழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோர் எம்பாவாய்! 15

நாயக னாய்நின்ற நந்தகோ பன்உடைய
கோயில்காப் பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில்காப் பானே! மணிக்கதவம் தாள்திறவாய்;
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன், மணிவண்ணன், நென்னலே வாய்நேர்ந்தான்;
தூயோமாய் வந்தோம், துயில்எழப் பாடுவான்;
வாயால்முன் னம்முன்னம் மாற்றாதே, அம்மா,நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோர் எம்பாவாய்! 16

எல்லே: என்னே. இளங்கிளியே: இளமைதங்கிய கிளிபோன்றுள்ளவளே நங்கைமீர்: பெண்காள். சில்லென்று: 'சிலுசிலு' என்று. போதர்கின்றேன்: (இதோ) வந்து விடுகின்றேன். உன் கட்டுரைகள் வல்லை: நீ கட்டிச் சொல்லும் வார்த்தைகளில் வல்லமையுள்ளவள். பண்டே: முன்னமே. வல்லீர்கள்: சாமர்த்தியசாலிகள். ஒல்லை: விரைவாய். என்னவேறுடையை: என்ன அதிசயம் தனியே உடையாய். போந்தாரோ: வந்துவிட்டாரோ. வல்ஆனை: குவலயாபீடம் என்னும் வலியயானை. மாற்றார்: எதிரிகள். மாறு அழிக்க: எதிராகநின்று அழிக்க. இப்பாடல் வினாவிடையாக அமைந்துள்ளது 15

நாயகன்: தலைவன். நின்ற: இருக்கும். கோயில்: அரண்மனை. சிறுமியரோம்: சிறுமியராகிய எங்களுக்கு. அறைபறை: ஒலிக்கின்றபறையைத் (தருவதாக) மாயன் மணிவண்ணன்: வியத்தகுசெயல்களும் நீல மணிபோன்றநிறமுமுள்ள கண்ணபிரான். நென்னலே: நேற்றே. வாய்நேர்ந்தான்: வாக்களித்திருக்கிறான். முன்னம்முன்னம்: முதல்முதல். மாற்றாதே: மறுத்துவிடாதே. நேயநிலைக்கதவம்நீக்கு: நேசமாய் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கும் கதவைத் திறப்பாயாக. 16

அம்பரமே, தண்ணீரே, சோறே, அறம்செய்யும்
எம்பெருமான்! நந்தகோ பாலா! எழுந்திராய்;
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெரு மாட்டி! யசோதாய்! அறிவுறாய்;
அம்பரம் ஊடுஅறுத்து ஓங்கி உலகுஅளந்த
உம்பர்கோ மானே! உறங்காது, எழுந்திராய்;
செம்பொற் கழல்அடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோர் எம்பாவாய்! 17

உந்து மதகளிற்றன், ஓடாத தோள்வலியன்,
நந்தகோ பாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்;
வந்துஎங்கும் கோழி அழைத்தனகாண்; மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயில்இனங்கள் கூவினகாண்;
பந்தார் விரலி!உன் மைத்துனன் பேர்பாட,
செந்தா மரைக்கையால் சீரார் வளைஒலிப்ப
வந்து திறவாய், மகிழ்ந்தேலோர் எம்பாவாய்! 18

அம்பரமே: ஆடைகளையே. சோறே: சோற்றையே. அறம்செய்யும்: (வேண்டுவோர் நிறைவடையும் வரை) தருமம் செய்கின்ற. கொம்பு அனார்க்கு எல்லாம் கொழுந்தே: பூங்கொம்பு போன்ற எங்களுக்கெல்லாம் கொழுந்து போன்றவளே. குலவிளக்கே: (புகுந்த) குலத்துக்கு மங்கள தீபம் போன்றவளே. அறிவுறாய்: துயிலுணர்ந்து எழுந்திருப்பாய். அம்பரம் ஊடறுத்து: ஆகாயமெங்கும் இடமின்றிச் செய்து. உம்பர் கோமானே: தேவாதிதேவனே. செல்வா பலதேவா: செல்வனாகிய பலதேவனே. உம்பி: உன்தம்பி (கண்ணன்). 17

உந்துமதகளிற்றன்: (தன்னால் வென்று) தள்ளப்படுகிற மதயானைகளை உடையவன். ஓடாத: (போர்க்களத்தில் முதுகுகாட்டி) ஓடாத. நப்பின்னாய்: நப்பின்னைப் பிராட்டியே. கந்தம்: நறுமணம். குழலீ: கூந்தலையுடையவளே. கடை: தாழ்ப்பாள். மாதவிப் பந்தல்மேல்: குருக்கத்திக் கொடிகளினாலான பந்தல்மேல் (உறங்கும்). பல்கால்: பலதடவை. பந்து ஆர்விரலி: பந்து பொருந்திய கைவிரல்களை உடையவளே. மைத்துனன்: கணவன் (கண்ணன்). சீரார் வளை ஒலிப்ப: சிறப்புப் பொருந்திய உன் கைவளைகள் குலுங்குமாறு. இராமானுஜர் உகந்து அனுபவித்த பாசுரம் இது என்பர். 18

குத்து விளக்குஎரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேல்ஏறி,
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்;
மைத்தடம் கண்ணினாய்! நீஉன் மணாளனை,
எத்தனை போதும் துயில்எழ ஒட்டாய்காண்!
எத்தனை யேலும் பிரிவுஆற்ற கில்லாயால்;
தத்துவம் அன்று, தகவேலோர் எம்பாவாய்! 19

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று,
கப்பம் தவிர்க்கும் கலியே! துயில்எழாய்;
செப்பம் உடையாய்! திறல்உடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயில்எழாய்;
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயில்எழாய்;
உக்கமும் தட்டொளியும் தந்துஉன் மணாளனை,
இப்போதே எம்மைநீர் ஆட்டேலோர் எம்பாவாய்! 20

கோட்டுக்கால் கட்டில்: யானைத் தந்தத்தால் செய்த கால்களையுடைய கட்டில். பஞ்ச சயனம்:(அழகு, குளிர்ச்சி, மென்மை, பரிமளம், வெண்மைஎன்ற) ஐந்து குணங்களையுடைய படுக்கை. கொத்தலர்; கொத்துக் கொத்தாக மலர்ந்திருக்கும். கொங்கை: மார்பகம். மைத்தடங் கண்ணினாய்: மைதீட்டிய விரிந்த கண்களையுடைய நப்பின்னையே. ஆற்றகில்லாய்: பொறுக்கும் வல்லமையற்றவளாயிருக்கிறாய். தத்துவம் அன்று தகவு: இப்படிச் செய்வது உனக்குத் தகுதி அன்று; உண்மை. 19

முப்பத்து மூவர் அமரர்: அஷ்டவசுக்கள், ஏகாதச ருத்திரர், துவாதச ஆதித்யர், அசுவினிதேவர் ஆக முப்பத்து மூன்று தேவர்கள். (8+11+12+2) தவிர்க்கும்: (நடுக்கத்தை) போக்கும். கலியே: மிடுக்கையுடைய கண்ணபிரானே. செப்பம்: அன்டினோரைக்காக்கும் குணம். திறல்: வலிமை செற்றார்: பகைவர். வெப்பம்: பயமாகிற காய்ச்சல். விமலா: தூய்மையானவனே. செப்பு: பொற்கலசம். அன்ன: போன்ற. சிறுமருங்குல்: நுண்ணிய இடை. உக்கம்: விசிறி. தட்டொளி: கண்ணாடி. மணாளன்: மணவாளனாகிய கண்ணன். நீராட்டு: நீராடச் செய்வாய். 20

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதுஅளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்;
ஊற்றம் உடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயில்எழாய்;
மாற்றார், உனக்கு வலிதொலைந்துஉன் வாசற்கண்
ஆற்றாது வந்துஉன் அடிபணியு மாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோர் எம்பாவாய்! 21

அங்கண்மா ஞாலத்து அரசர், அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கம் இருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்;
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே,
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல்,
அங்கண் இரண்டும்கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்,
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய்! 22

ஏற்ற: (கறந்த பாலை) ஏற்றுக்கொண்ட. கலங்கள்: பாத்திரங்கள். எதிர் பொங்கிமீது அளிப்ப: நிறைந்து எதிராகப் பொங்கி மேலே வழியும் படியாக. மாற்றாதே: இடைவிடாமல். ஆற்றப் படைத்தான்; மிகுதியாக உடைய நந்தகோபன். அறிவுறாய்: எழுந்திருப்பாய். ஊற்றம்: (அடியாரைக்காப்பதில்) சிரத்தை. தோற்றம்: அவதாரம். சுடரே: ஒளிவடிவானவனே. ஆற்றாது: கதியற்று. பால்வளப் பெருக்கைப் படம் பிடித்துக்காட்டும் பாடல் இது. 21

அங்கண்மாஞாலம்: அழகிய விசாலமான பெரியபூமி. அபிமான பங்கமாய் வந்து நமக்கு மேற்பட்டவர் இல்லை என்னும் அகங்காரம் அடங்கி வந்து. சங்கம்இருப்பார்போல்: திரள்திரளாக வந்திருப்பதுபோல். தலைப்பெய்தோம்: அணுகப்பெற்றோம். கிங்கிணிவாய் செய்த: கிண்கிணியின் வாய்போல் சிறிது மலர்ந்த. சிறுச்சிறிதே: சிறிதுசிறிதாக. விழியாவோ: விழிக்கலாகாதோ. திங்கள்: சந்திரன். ஆதித்தியன்: சூரியன். நோக்குதி: அருள்பாலிப்பாயாக. சாபம் இழிந்து: பாபம் கழிந்து போகும். 22

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துஉறங்கும்
சீரிய சிங்கம், அறிவுற்றுத் தீவிழித்து,
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துஉதறி,
மூரி நிமிர்ந்து, முழங்கிப் புறப்பட்டு,
போதருமா போலேநீ, பூவைப்பூ வண்ணா!உன்
கோயில்நின்று இங்ஙனே போந்தருளி, கோப்புடைய
சீரிய சிங்காசனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்! 23

அன்றுஇவ் உலகம் அளந்தாய்! அடிபோற்றி;
சென்றுஅங்குத் தென்இலங்கை செற்றாய்! திறல்போற்றி;
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி;
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி;
குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி;
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி;
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்,
இன்றுயாம் வந்தோம்; இரங்கேலோர் எம்பாவாய்! 24

மாரிமலைமுழைஞ்சில்: மழைக்காலத்திலே மலைக்குகையில். மன்னி: பொருந்தி. சீரிய: சிறப்புவாய்ந்த. அறிவுற்று: தூக்கம்தெளிந்து. தீவிழித்து: நெருப்புப் பொறிபறக்கக் கண்களை விழித்துக்கொண்டு வேரிமயிர்: மணமுள்ள பிடரி மயிர். எப்பாடும்; எப்பக்கமும். பேர்ந்து: புடைபெயர்ந்து. மூரிநிமிர்ந்து முழங்கி: சோம்பல் முறித்து மிடுக்குடன் நிமிர்ந்து கர்ஜித்து. போதருமா: வெளிப்பட்டுவருவது. பூவைப்பூவண்ணா: காயாம்பூவைப்போன்ற நீல நிறத்தையுடையவனே. கோப்புடைய: அழகிய வேலைப்பாடுகள் அமைந்த. சிங்கத்தின் கம்பீரமான தோற்றம், புறப்பாடு ஆகியவை சிறப்பான கவிச் சுவையுடன் வருணிக்கப்பட்டுள்ளன. 23

அன்று: (திருவிக்கிரமாவதாரம் எடுத்த) அக்காலத்தில். சென்று: (இராவணன் இருந்த இடம்) போய். செற்றாய் அறுத்தாய். திறல்: வலிமை. பொன்ற: அழிய. சகடம்: சகடாசுரன்: கன்று; (கன்றின் வடிவாக வந்த) அசுரன். குணிலா: எறிதடியாக. குன்று: கோவர்த்தனமலை. 24

ஒருத்தி மகனாய்ப் பிறந்து,ஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர,
தருக்கிலான் ஆகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை,
அருத்தித்து வந்தோம்; பறைதருதி ஆகில்,
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி,
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம்பாவாய்! 25

மாலே! மணிவண்ணா! மார்கழிநீர் ஆடுவான்,
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்,
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன,
பாலன்ன வண்ணத்துஉன் பாஞ்ச சன்னியமே,
போல்வன சங்கங்கள், போய்ப்பாடு உடையனவே,
சாலப் பெரும்பறையே, பல்லாண்டு இசைப்பாரே,
கோல விளக்கே, கொடியே, விதானமே,
ஆலின் இலையாய்! அருளேலோர் எம்பாவாய்! 26

ஒருத்தி: (இங்கே) 1 தேவகி; 2 யசோதை. தரிக்கிலானாகி: பொறாதவனாகி. தீங்கு: தீமை. கருத்தை: எண்ணத்தை. கஞ்சன்: கம்சன். அருத்தித்து: விரும்பி. திருத்தக்க செல்வமும்: திருமாமகளாகிய பிராட்டிக்குத் தக்க உனது செல்வத்தையும். சேவகமும்: வீரபராக்கிரமத்தையும். கண்ணனுடைய தனிப் பெருந்திறமை பேசப்பட்டு, 'இத்தகைய சாமர்த்தியசாலியாகிய நீ சிறுமியராகிய எங்கள் வேண்டுகோளை நிறைவேற்றுவது எளிதல்லவோ' என்ற குறையிரத்தல் பாசுரத்தில் தொனிக்கிறது 25

மாலே: (அடியவரிடம்மிக்க) மோகமுள்ளவனே. ஆலின் இலையாய்: ஆல் இலை மேல் பள்ளி கொள்பவனே. மேலையார்: பெரியோர். செய்வனகள்: செய்யும் முறைகளில். கேட்டியேல்: கேட்பாயானால். ஞாலம்: உலகம். முரல்வன: ஒலிக்கின்றனவும். வண்ணம்; நிறம். பாஞ்சசன்னியம்: திருப் பாஞ்சசன்யம் என்னும் சங்கு. போய்ப்பாடு உடையன: மிகவும்இடமுடையன. சால: மிகவும். கோலவிளக்கு: அழகிய விளக்கு. 26

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்;
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப்பூவே,
பாடகமே, என்றுஅனைய பல்கலனும் யாம்அணிவோம்;
ஆடை உடுப்போம்; அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து, முழங்கை வழிவார,
கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்! 27

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந்து உண்போம்;
அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்துஉன் தன்னைப்
பிறவி பெருந்தனைப் புண்ணியம்யாம் உடையோம்;
குறைவுஒன்றும் இல்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல் நமக்குஇங்கு ஒழிக்க ஒழியாது;
அறியாத பிள்ளைகளோம், அன்பினால்உன் தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறிஅரு ளாதே
இறைவா!நீ தாராய், பறையேலோர் எம்பாவாய்! 28

கூடாரை: தன்னை அடிபணியாதவர்களை. சீர்க்கோவிந்தா: சிறப்பு உடைய கோவிந்தனே. பறைகொண்டு: விரதத்திற்கு வேண்டிய பறைபெற்று, விரதத்தை முடித்துக்கொண்டு. நாடு புகழும் பரிசினால்: நாட்டார் கொண்டாடும்படியாக. சூடகம், தோள்வளை, தோடு, செவிப்பூ, பாடகம் இவை அனைத்தும் நகைகளாகும் பல்கலன்: பலவேறு ஆபரணங்கள். பாற் சோறு மூட நெய்பெய்து: பாற்சோறு மறையும்படியாக நெய்பரிமாறி. வழிவார: வழியே பெருக உண்ணுவது. 27

கறவைகள்: பசுக்கள். கானம் சேர்ந்து: காடு சேர்ந்து. அறிவு ஒன்றும் இல்லாத ஆய்க்குலத்து: சிறிதளவும் அறிவில்லாத இடைக்குலத்தில். பிறவி பெறுந்தனை: பெறுவதற்குத்தக்க. இங்கு ஒழிக்க ஒழியாது: இங்கு உன்னாலும் எம்மாலும் ஒழிக்க ஒழியமாட்டாது. சிறு பேர் அழைத்தனவும்: சிறிய பேராலே (நாங்கள்) அழைத்ததைக் குறித்தும். சீறி: கோபித்து. 28

சிற்றம் சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்து,உன்
பொற்றாமரைஅடியே போற்றும் பொருள்கேளாய்,
பெற்றம்மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது,
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்; உனக்கேநாம் ஆட்செய்வோம்;
மற்றைநம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்! 29

வங்கக் கடல்கடைந்த மாதவனை, கேசவனை,
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றுஇறைஞ்சி,
அங்குஅப் பறைகொண்ட ஆற்றை, அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே,
இங்குஇப் பரிசுஉரைப்பார், ஈர்இரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற்று இன்புறுவர்; எம்பாவாய்! 30

சிற்றஞ் சிறுகாலை: அருணோதயகாலம். பெற்றம்: பசுக்கள். குலம்: (இங்கே) இடைக்குலம். குற்றேவல்: அந்தரங்க சேவை. இற்றைப் பறை கொள்வான் அன்று காண்: இன்று கொடுக்கப்படுகிற இப்பறையைப் பெற்றுக்கொள்வதற்காக நாங்கள் வந்தோமல்லோம். உற்றோமே ஆவோம்: உறவு உடையவர்களாகக் கடவோம். ஆள் செய்தல்: அடிமை செய்தல். காமங்கள்: விருப்பங்கள். மாற்று: தவிர்த்தருள். 29

வங்கம்: கப்பல். கடல்: (இங்கே) திருப்பாற்கடல். திங்கள் திருமுகத்துச் சேயிழையார்: சந்திரனைப் போன்ற அழகிய முகமும், அழகிய ஆபரணங்களுமுடைய கோபிமார். இறைஞ்சி: வணங்கி. ஆற்றை: வரலாற்றை. அணி புதுவை: அழகிய ஸ்ரீவில்லிபுத்தூர். பைங்கமலம்: பசுமை பொருந்திய தாமரை மலர். தண்தெரியல்: குளிர்ந்தமாலை. பட்டர்பிரான் கோதை: பெரியாழ்வாரின் திருமகளான ஆண்டாள். சங்கத் தமிழ்மாலை: திரள் திரளாக அனுபவிக்க வேண்டிய தமிழ்மாலையான. முப்பதும்: முப்பது பாசுரங்களும். இப்பரிசு: இவ்வண்ணம். மால்: பெரிய. 30

பாதகங்கள் தீர்க்கும்;
    பரமன் அடிகாட்டும்;
வேதம் அனைத்துக்கும்
    வித்து ஆகும்;—கோதைதமிழ்
ஐயைந்தும் ஐந்தும்
    அறியாத மானிடரை
வையம் சுமப்பதூஉம் வம்பு.


மாணிக்கவாசகர்

2. திருவெம்பாவை

3. திருப்பள்ளி எழுச்சி

மாணிக்கவாசகர்

அருளியது

2. திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும், வாள்தடம்கண்
மாதே! வளருதியோ! வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்துஒலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே, விம்மிவிம்மி, மெய்ம்மறந்து,
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள்என் னே!என்னே!
ஈதேஎம் தோழி பரிசு,ஏலோர் எம்பாவாய்! 1

"பாசம் பரஞ்சோதிக்கு என்பாய், இராப்பகல்நாம்
பேசும்போது; எப்போதுஇப் போதார் அமளிக்கே,
நேசமும்வைத்தனையோ?நேரிழையாய்?" "நேர்இழையீர்!
சீசீ! இவையும் சிலவோ? விளையாடி
ஏசும் இடம்ஈதோ?" "விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்துஅருள வந்துஅருளும்
தேசன்; சிவலோகன்; தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பர்யாம் ஆர்,ஏலோர், எம்பாவாய்!" 2

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்சோதி: தொடக்கமும் இறுதியும் இல்லாத அரிய பெரிய ஒளிப்பிழம்பாக உள்ள இறைவன். வாள்தடங்கண்: ஒளி பொருந்திய அகன்ற கண்கள். வளருதியோ: துயில்கின்றாயோ. வன் செவி: செவிட்டுக்காது. வார். நெடிய. கழல்கள்: சிலம்பணிந்த திருவடிகள். வீதிவாய்: தெருவில். கேட்டலுமே: கேட்டவுடன். போது ஆர் அமளி: மலர் நிறைந்த படுக்கை. விம்மி: தேம்பி. மெய்ம்மறந்து: தன்னை மறந்து. கிடந்தாள்: (ஒரு செயலுக்கும் ஆகாமல்) கிடந்தாள். பரிசு: தன்மை. ஏல்: ஏற்றுக்கொள். ஓர்: ஆராய்ந்து பார். எம்பாவாய்: எமது பதுமை போன்ற நங்கையே. 1

பாசம்: அன்பு. பரஞ்சோதி: ஒளிப்பிழம்பாக உள்ள இறைவன். என்பாய்: என்று கூறுவாய். இராப்பகல்: இரவும் பகலும். நேசம்: அன்பு. நேரிழையாய்: அழகிய அணிகளை அணிந்திருப்பவளே. இவையும்: (நீங்கள் பேசும்) நகை மொழிகளும். விண்ணோர்கள்: தேவர்கள். ஏத்துதற்கு: புகழ்ந்து பாராட்டு தற்கு. கூசும்: நாணும். தேசன்: ஒளிவடிவானவன். 2

முத்துஅன்ன வெண்நகையாய்! முன்வந்து,எதிர் எழுந்து,என்
அத்தன், ஆனந்தன், அமுதன்என்று அள்ஊறித்
தித்திக்கப் பேசுவாய்; வந்துஉன் கடைதிறவாய்!
பத்துஉடையீர்! ஈசன் பழஅடியீர்! பாங்குஉடையீர்!
புத்துஅடியோம், புன்மைதீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ?
எத்தோ,நின் அன்புடைமை? எல்லோம் அறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ, நம்சிவனை?
இத்தனையும் வேண்டும் எமக்கு,ஏலோர் எம்பாவாய்! 3

"ஒள்நித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?"
"வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?"
"எண்ணிக்கொடு உள்ளவா சொல்லுகோம்; அவ்வளவும்
கண்ணைத் துயின்று,அவமே காலத்தைப் போக்காதே,
விண்ணுக்கு ஒருமருந்தை, வேத விழுப்பொருளை,
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துஉள்ளம்
உள்நெக்கு நின்றுஉருக, யாம்மாட்டோம், நீயேவந்து
எண்ணிக் குறையில் துயில்"ஏலோர் எம்பாவாய்! 4

முத்தன்ன: முத்தைப்போன்ற. வெண்நகையாய்: வெள்ளிய பற்களையுடைய பெண்ணே. முன் எழுந்து: (படுக்கையினின்றும் துயில்நீத்து எங்களுக்கு) முன்னரே எழுந்து. அத்தன்: தந்தை. அமுதன்: அழிவற்றவன். அள்ளூறி: வாயூறிஇனிக்க. கடை: வாயிற்கதவு. பத்துடையீர்: (இறைவனிடத்து) பேரன்புடையீர். பாங்குடையீர்:மிகுந்த உரிமையுடையவர்களே. புத்தடியோம்: புதிய தொண்டர்களோம். புன்மை தீர்த்து: குற்றத்தை நீக்கி. பொல்லாதோ: தீங்காமோ. எத்தோ; ஏமாற்றமோ. 3

ஒள்நித்தில நகையாய்; ஒளிபொருந்திய முத்துப்போன்ற பற்களையுடைய பெண்ணே. புலர்ந்தின்றோ: விடியவில்லையா. வண்ணக் கிளிமொழியார்: அழகிய கிளியினது மொழிபோன்ற சொல்லினையுடைய பெண்கள். உள்ளவா: உள்ளவாறு. எண்ணிக்கொடு: கணக்கிட்டு. அவமே: வீணாக. விண்ணுக்கு: தேவர்களுக்கு. ஒரு மருந்தை: ஒப்பற்ற அமுதமாய் உள்ளவனை. விழுப் பொருள்: சிறந்த பொருள். கசிந்து: குழைந்து. உள்ளம் உள்நெக்கு நின்று உருக: உள்ளம் நெகிழ்ந்து நின்று, உள் உருகுவோமாக. 4

மால்அறியா, நான்முகனும் காணா மலையினை,நாம்
போல்அறிவோம் என்றுஉள்ள பொக்கங்க ளேபேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீ! கடை திறவாய்!
ஞாலமே, விண்ணே, பிறவே அறிவரியான்,
கோலமும், நம்மைஆட் கொண்டுஅருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் "சிவனே! சிவனே!" என்று
ஓலம் இடினும் உணராய்; உணராய்காண்;
ஏலக் குழலீ! பரிசு,ஏலோர் எம்பாவாய்! 5

மானே!நீ நென்னலை, "நாளைவந்து உங்களை
நானே எழுப்புவன்" என்றலும் நாணாமே
போன திசைபகராய்; இன்னம் புலர்ந்தின்றோ?
வானே, நிலனே, பிறவே அறிவுஅரியான்
தானே வந்து எம்மைத் தலைஅளித்துஆட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குஉன் வாய்திறவாய்,
ஊனே உருகாய்; உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடு,ஏலோர் எம்பாவாய்! 6

மால்அறியா: திருமாலால் அறியப்படாத (அடியினையும்) நான்முகனும் காணா: பிரமனால் காணப்படாத (முடியினையும்) மலை: மலையுருவாய் நின்ற (திருவண்ணாமலை) பிரானை. பொக்கங்களே: பொய்களையே. பால்ஊறு தேன்வாய்ப் படிறீ: சுரக்கின்ற பாலையும் தேனையும்போல் இனிக்கப்பேசும் வாயினையுடைய வஞ்சகீ. ஞாலமே: பூவுலகத்துள்ளார். பிறவே: பிறஉலகத்துள்ளார். கோலம்: திருவுருவம். கோதாட்டும்: சீர்செய்யும். சீலம்: அருட்குணம். இடினும்: கூவியும். ஏலக்குழலி: மயிர்ச்சாந்து பூசப்பெற்ற கூந்தலையுடைய பெண்ணே. 5

மானே: மான்போன்ற மருள் நோக்குடைய பெண்ணே நென்னலை நேற்று, என்றலுமே: என்று சொன்னவுடனேயே (சென்றுவிட்டாய்) பகராய், சொல்லமாட்டாயா. புலர்ந்தின்றோ: விடியவில்லையா. வானே, நிலனே பிறவே அறிவறியான்: வானுலகும் மண்ணுலகும் ஏனையவும் அறியக்கூடாத பெருமான். தலையளித்து: முதற் கருணைபாலித்து. வான்வார்கழல்: அழகிய நெடிய வீரக்கழல் அணிந்த திருவடிகள். உறும்: பொருந்தும் கோன், தலைவன். 6

அன்னே! இவையும் சிலவோ? பலஅமரர்
உன்னற்கு அரியான், ஒருவன், இருஞ்சீரான்,
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்திறப்பாய்;
'தென்னா' என்னாமுன்னம் தீசேர் மெழுகுஒப்பாய்;
என்னானை என்அரையன் இன்அமுதுஎன்று எல்லோமும்
சொன்னோம், கேள், வெவ்வேறாய்; இன்னம் துயிலுதியோ?
வல்நெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்,
என்னே! துயிலின் பரிசு?ஏலோர் எம்பாவாய்! 7

கோழி சிலம்பச் சிலம்பும் குருகுஎங்கும்;
ஏழில் இயம்பம் இயம்பும்வெண் சங்குஎங்கும்;
கேழில் பரஞ்சோதி; கேழில் பரங்கருணை;
கேழில் விழுப்பொருள்கள், பாடினோம்; கேட்டிலையோ?
வாழி!ஈது என்ன உறக்கமோ? வாய்திறவாய்;
ஆழியான் அன்புடைமை ஆம்ஆறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை,
ஏழைபங் காளனையே பாடு,ஏலோர் எம்பாவாய்! 8

அன்னே: தாயே. இவையும்: (நின் செயல்களுள்) இவைகளும். அமரர்: தேவர். உன்னுதற்கு: நினைத்தற்கு ஒருவன்: ஈடில்லாதவன். இருஞ்சீரான்: மிக்க பெருமையுடையவன். சின்னங்கள்: சங்கு முதலிய ஒலிக்கருவிகள். தென்னா: தென்னவனே. என்னானை: எனக்குத்தந்தை. அரையன்: அரசன். வெவ்வேறாய்: தனித்தனியாய். வல்நெஞ்சம்: (ஆண்டவன்பால் அன்பில்லா) திண்ணிய மனம். பேதையர்: அறிவிலார். வாளாகிடத்தியால்: சும்மா படுத்திருக்கின்றாயே. பரிசு; தன்மை. 7

சிலம்ப; கூவ. குருகு: பறவைகள். ஏழில் இயம்ப: யாழ் ஒலிக்க. வெண்சங்கு எங்கும் இயம்பும்: வெண்சங்கமானது எவ்விடத்தும் முழங்குகிறது. கேழ்இல்: ஒப்பற்ற. விழுப்பொருள்கள்: சிறந்த பொருள்கள் கேட்டிலையோ: கேட்க வில்லையா. வாழி: வாழ்வாயாக. ஆழியான்: அருட்கடலாகிய சிவபெருமான். அன்புடைமை ஆமாறும்: அன்பு செய்யும் நெறியும். முதல்வனாய்: தலைவனாய். ஏழைபங்காளன்: 1 உமையொருபாகன். 2 ஏழைகள் பக்கமாகவே இருப்பவன். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே!
உன்னைப் பிரான் ஆகப் பெற்றஉன் சீர்அடியோம்,
உன் அடியார் தாள்பணிவோம்; ஆங்குஅவர்க்கே பாங்காவோம்;
அன்னவரே எம்கணவர் ஆவார், அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்;
இன்ன வகையே எமக்குஎம்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம், ஏலோர் எம்பாவாய்! 9

பாதாளம் ஏழினும்கீழ் சொற்குஅழிவு பாதமலர்;
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே;
பேதை ஒருபால், திருமேனி ஒன்றுஅல்லன்;
வேதமுதல்; விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன்; தொண்டர்உளன்;
கோதுஇல் குலத்துஅரன்தன் கோயில்பிணாப்பிள்ளைகாள்!
ஏதுஅவன்ஊர்? ஏதுஅவன்பேர்? ஆர்உற்றார்? ஆர்அயலார்?
ஏதுஅவனைப் பாடும் பரிசு?ஏலோர் எம்பாவாய்! 10

முன்னை: முற்பட்டனவாகிய. பின்னை: பிற்பட்டனவாகிய. பேர்த்தும்: மீண்டும். பெற்றியனே: தன்மையனே. பிரானாக: தலைவனாக. சீரடியோம்: சிறப்புமிக்க அடிமைகளாகிய நாங்கள். பாங்காவோம்: உரிமையராவோம். உகந்து: விரும்பி. சொன்ன: கட்டளையிட்ட. தொழும்பாய்: அடிமையாய். பணிசெய்வோம்: ஏவல் கேட்போம். நல்குதியேல்: அருள்புரிவையாயின். இலோம்: இல்லாதவராவோம். 9

பாதாளம்: கீழுலகம். சொற்கு அழிவு: சொல்லில் அடங்காத நிலையிலுள்ளது. பாதமலர்: திருவடித்தாமரை. போது: மலர்கள். ஆர்: நிறைந்த. புனைமுடி: அணிசெய்யப்பட்ட திருமுடி. பேதை: உமையவள். ஒருபால்: ஒரு பக்கம். ஓத உலவா: புகழ்ந்துகூறி முற்றுப்பெறாத. ஒரு தோழன்: ஒப்பற்ற துணைவன். தொண்டர் உளன்: அடியவர் அகத்தினில் உறைபவன். கோதுஇல்: குற்றமற்ற. குலம்: உயர்குலம். அரன்: சிவன். பிணாப் பிள்ளைகாள்: பெண் பிள்ளைகளே. 10

மொய்ஆர் தடம்பொய்கை புக்கு முகேர்என்னக்
கையால் குடைந்து குடைந்துஉன் கழல்பாடி,
ஐயா!வழிஅடியோம் வாழ்ந்தோம்காண்! ஆர்அழல்போல்
செய்யா!வெண் நீறுஆடி! செல்வா! சிறுமருங்குல்
மையார் தடம்கண் மடந்தை மணவாளா!
ஐயா!நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்துஒழிந்தோம்;
எய்யாமல் காப்பாய் எமை;ஏலோர் எம்பாவாய்! 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்துஆடும்
தீர்த்தன்,நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்;இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும், படைத்தும், கரந்தும் விளையாடி,
வார்த்தையும் பேசி, வளைசிலம்ப, வார்கலைகள்
ஆர்ப்புஅரவம் செய்ய, அணிகுழல்மேல் வண்டுஆர்ப்ப,
பூத்திகழும் பொய்கைகுடைந்து,உடையான் பொற்பாதம்
ஏத்தி, இருஞ்சுனைநீர் ஆடு,ஏலோர் எம்பாவாய்! 12

மொய்: வண்டுகள். ஆர்: நிறைந்த. தடம் பொய்கை: அகன்ற திருக்குளம். முகேர்: ஒலிக்குறிப்பு. குடைந்து: (நீரை) இறைத்து. வழியடியோம்: பரம் பரைத் தொண்டர்களோம். ஆர்அழல்: நிறைந்த நெருப்பு. செய்யா: செம்மை நிறமுடையவனே. வெண்நீறுஆடி: வெண்மையான திருநீற்றை நிறைய அணிந்தவனே. செல்வா: வீட்டுச் செல்வத்தை உடையவனே. சிறுமருங்குல்: நுண்ணிய இடை. மடந்தை: உமையம்மை. மணவாளா: கணவனே. உய்வார்கள்: நற்கதிபெறுவார்கள். உய்ந்து ஒழிந்தோம்: கடைத்தேறிவிட்டோம். எய்யாமல்: இளைத்துப்போகாமல். 11

ஆர்த்த: பிணிக்கப்பட்ட. ஆர்த்து: ஆரவாரித்து. தீர்த்தன்: தூயதன்மையன். தீயாடும் கூத்தன்: அனல் ஏந்தி ஆடுகின்ற நடராசப்பெருமான். குவலயம்: நிலவுலகம். கரந்தும்: மறைத்தும். விளையாடி: விளையாடுகின்ற சிவபெருமான். வார்த்தை: புகழ்மொழிகள். வளைசிலம்ப: கைவளைகள் ஒலிக்க. வார்: நீண்ட. கலைகள்: ஆடைகள். ஆர்ப்பு அரவம்: ஆரவார ஒலி. செய்ய: எழுப்ப. குழல்: கூந்தல். வண்டு ஆர்ப்ப: வண்டுகள் ரீங்காரம் செய்ய. திகழும்: விளங்கு கின்ற. உடையான்: யாவையும் உடைய இறைவன். இருஞ்சுனை: பெரிய நீர் நிலை. 12

பைங்குவளைக் கார்மலரால்; செங்கமலப் பைம்போதால்;
அங்கம் குருகுஇனத்தால்; பின்னும் அரவத்தால்;
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்;
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றுஇசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து,நம்
சங்கம் சிலம்ப, சிலம்பு கலந்துஆர்ப்ப,
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்க,
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடு,ஏலோர் எம்பாவாய்! 13

காதுஆர் குழைஆட, பைம்பூண் கலன்ஆட,
கோதை குழல்ஆட, வண்டின் குழாம்ஆட,
சீதப் புனல்ஆடி, சிற்றம் பலம்பாடி,
வேதப் பொருள்பாடி, அப்பொருள்ஆ மாபாடி,
சோதி திறம்பாடி, சூழ்கொன்றைத் தார்பாடி,
ஆதி திறம்பாடி, அந்தமாம் ஆபாடி,
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி. ஆடு,ஏலோர் எம்பாவாய்! 14

பைங்குவளைக்கார் மலரால்: பசிய கரிய குவளைப்பூவால். செங்கமலப் பைம் போதால்: பசுமைமிக்க செந்தாமரைப் பூவால். அங்கம் குருகு இனத்தால் அழகிய நீர்வாழ் பறவைகளையுடைமையால். அங்கம்: 1. அழகு; 2. உடம்பின் உறுப்பு. குருகு: 1. பறவை; 2. வளையல்; 3. குருக்கத்திமலர். அரவம்: 1. ஓசை 2. பாம்பு. தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தல்: தம்மிடமுள்ள அழுக்கைக் கழுவவந்தடைதல். (புறமலம் கழுவுவது பொய்கை; அகமலம் அகற்றுவது ஆண்டவன் அருள்திறம்— 'தமிழ்க்கடல்' ராய. சொ.) போன்று இசைந்த: போலப்பொருந்திய. சங்கம்: வளைகள். பொங்க: பூரிப்படைய. (இப்பாடலில் அம்பிகைக்கும்—சிவபிரானுக்கும் மடுவுக்கும் நயம்பட உவமை உரைக்கப்படுவதைத் தக்கோர் வாய்க் கேட்டறிக) 13

ஆர்: பொருந்திய. குழை: தோடு. கலன்: நகை கோதை: மாலை. குழல்: கூந்தல். குழாம்: கூட்டம். சீதப்புனல்: குளிர்ந்த நீர். சிற்றம்பலம்: பொன்னம்பலம். ஆம் ஆ: ஆகும் விதம். சோதி திறம்: ஒளிவடிவினனான இறைவனின் ஆற்றல். ஆதி: முதல். அந்தம்: இறுதி. பேதித்து: வேறு படுத்தி. பெய்வளை: வளைகள் அணிந்த அம்பிகை. 14

ஓர்ஒருகால் எம்பெருமான் என்றுஎன்றே நம்பெருமான்
சீர்ஒருகால் வாய்ஓவாள்; சித்தம் களிகூர,
நீர்ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்ப,
பார்ஒருகால்வந்தனையாள்;விண்ணோரைத்தான்பணியாள்
பேர்அரையற்கு இங்ஙனே பித்துஒருவர் ஆம்ஆறும்,
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்வித்தகர்தாள்,
வார்உருவப் பூண்முலையீர்! வாயார நாம்பாடி,
ஏர்உருவப்பூம்புனல்பாய்ந்துஆடுஏலோர்எம்பாவாய்! 15

முன்இக் கடலைச் சுருக்கி, எழுந்துஉடையாள்
என்னத் திகழ்ந்து,எம்மை ஆள்உடையாள் இட்டுஇடையின்
மின்னிப் பொலிந்து,எம் பிராட்டி திருவடிமேல்
பொன்னம் சிலம்பில் சிலம்பி, திருப்புருவம்
என்னச் சிலைகுலவி, நம்தம்மை ஆள்உடை யாள்
தன்னில் பிரிவுஇலா எம்கோமான், அன்பர்க்கு
முன்னி, அவள்நமக்கு முன்சுரக்கும் இன்அருளே
என்னப் பொழியாய் மழை,ஏலோர் எம்பாவாய்! 16

ஓர் ஒருகால்: ஒவ்வொருவேளையில். நம்பெருமான்: நம் தலைவனாகிய சிவபெருமான். சீர்: புகழ். வாய் ஓவாள்: வாய் ஓயமாட்டாள். சித்தம்: உள்ளம். களிகூர: களிப்புமிக. நீர் ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்ப: நீர் ஒருகாலும் வற்றாத நெடிய தாரையாகக் கண்கள் பொழிய. பார்: நிலம். வந்தனையாள்: வணங்குவாள். பணியாள்: தொழமாட்டாள். பேர் அரையன்: பெரிய மன்னன்: வித்தகர்: திறமையுடையார். வார்: கச்சு. உருவ: ஊடுருவ வல்ல. வாயார: வாய்நிறைய. 15

முன்னி: 1. முன்னமே, 2. சார்ந்து. சுருக்கி: (குடித்துச்) சுருங்கச்செய்து. உடையாள்: அம்பிகை. திகழ்ந்து: விளங்கி. எம்மை ஆளுடையாள். எம்மை ஆட்கொண்டருளிய அவ் அம்மையின். இட்டு இடை: சிறிய இடுப்பு. பொலிந்து: விளக்கமுற்று. பொன்அம்சிலம்பு: பொன்னாலாகிய அழகிய காலணி. சிலம்பி: ஒலித்து. சிலைகுலவி: வானவில் வீசி. முன்னி: விரைந்து. (திருப்பாவை 4ஆவது பாடல் இப்பாடலுடன் பெரிதும் ஒத்துள்ளது). 16

செங்கண் அவன்பால், திசைமுகன்பால், தேவர்கள்பால்,
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குஉண் கருங்குழலி! நம்தம்மைக் கோதாட்டி,
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்துஅருளி,
செங்கமலப் பொற்பாதம் தந்துஅருளும் சேவகனை,
அங்கண் அரசை, அடியோம்கட்கு ஆரமுதை,
நங்கள் பெருமானைப் பாடி, நலம்திகழ,
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடுஏலோர் எம்பாவாய்! 17

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றுஇறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை,வீறு அற்றால்போல்
கண்ஆர் இரவி கதிர்வந்து கார்கரப்ப,
தண்ஆர் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகல,
பெண் ஆகி, ஆணாய். அலியாய், பிறங்குஒளிசேர்
விண்ஆகி, மண்ஆகி, இத்தனையும் வேறுஆகி,
கண்ஆர் அமுதமுமாய் நின்றான் கழல்பாடி,
பெண்ணே! இப் பூம்புனல்பாய்ந்து ஆடு,ஏலோர் எம்பாவாய்! 18

செங்கண் அவன்; சிவந்த கண்களையுடைய திருமால். பால்: இடத்தும், திசைமுகன்; பிரமன். நம்பாலதா: நம்மிடத்ததாக. கொங்கு: மணம். உண்: தங்கிய: கருங்குழலி. கரிய கூந்தலையுடையாளே. கோதாட்டி. (வினை) குற்றம் நீக்கி. இல்லம்: வீடு செங்கமலப் பொற்பாதம்: செந்தாமரை போன்ற அழகிய திருவடிகள். சேவகனை: அண்ணலை. அம்கண் அரசை: அழகிய கருணையுள்ள இறைவனை. நலம் திகழ: நன்மை சிறக்க. பங்கயம்: தாமரை. பூம்புனல்: இனிய நீர். ஆடேல்: ஆடுவோமாக 17

அடிக்கமலம்: திருவடித்தாமரை. இறைஞ்சும்: வணங்கும். மணித்தொகை: இரத்தினங்களின் தொகுதி. வீறு: சிறப்பு. அற்றாற்போல்: (ஒளி மழுங்கி) ஒழிந்தமைபோல். கண்ஆர: வானிடத்தை நிறைக்கும், இரவி: சூரியன். கார்: இருள். கரப்ப: மறைக்க. தண்: குளிர்ச்சி. தாரகைகள்: நட்சத்திரங்கள். அகல: நீங்க. பிறங்கு ஒளிசேர்; விளங்கும் ஒளிகூடும். கண் ஆர்: கண் நிறைந்த. 18

உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று,
அங்குஅப் பழம்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்,
எங்கள் பெருமான்! உனக்குஒன்று உரைப்போம், கேள்!
எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க;
எங்கை உனக்குஅல்லாது எப்பணியும் செய்யற்க;
கங்குல் பகல்எங்கண் மற்றுஒன்றும் காணற்க;
இங்குஇப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்,
எங்குஎழில்என் ஞாயிறு? எமக்கு,ஏலோர் எம்பாவாய்! 19

போற்றி, அருளுக! நின் ஆதியாம் பாதமலர்;
போற்றி, அருளுக! நின் அந்தமாம் செந்தளிர்கள்;
போற்றி,எல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்;
போற்றி,எல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்;
போற்றி,எல் லாஉயிர்க்கும் ஈறாம் இணைஅடிகள்;
போற்றி,மால் நான்முகனும் காணாத புண்டரிகம்;
போற்றி,யாம்உய்ய ஆட்கொண்டுஅருளும்பொன் மலர்கள்
போற்றி,யாம் மார்கழிநீர் ஆடு,ஏலோர் எம்பாவாய்! 20

உம் கையில் பிள்ளை; உம் கையிற் சேர்ப்பிக்கப்பெறும் இப்பெண். அங்கு அப்பழம் சொல்: திருமணகாலத்தில் பண்டைமுதல் வழங்கிவரும் சொல்லை. புதுக்கும்: புதுப்பிக்கும். அச்சம்: பயம். சேரற்க: தழுவாதிருக்கட்டும். கங்குல்: இரவு. பரிசு: தன்மை. எங்கோன்: எங்கள் தலைவன். நல்குதியேல் அருளுவாயானால். எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு: சூரியன் எத்திசையில் உதித்தால் எங்களுக்கு என்ன கவலை. எழில்: தோன்றினால். ஞாயிறு: சூரியன். 19

போற்றி: வணக்கம். அருளுக: அருளுவாயாக: ஆதியாம்: முதலாகிய. அந்தமாம்: முடிவாம். செந்தளிர்கள்: செவ்விய தளிர்போன்ற திருவடிகள். பொற்பாதம்: பொன்போன்ற திருவடிகள். போகம் ஆம்: இன்பமாம். பூங்கழல்கள்; மலரடிகள். ஈறு: முடிவு இணை: இரண்டு. மால்: திருமால். நான்முகன்: பிரமன். புண்டரிகம்: தாமரை: உய்ய: கடைத்தேற பொன் மலர்கள்: தங்கப்பூக்களை ஒத்த திருவடிகள். யாம் மார்கழி நீர்ஆடு: நாம் மார்கழி மாதத்தில் ஆடும் நீராட்டம்ஆடுவோமாக. பாதமலர் செந்தளிர்கள் பொற்பாதம், பூங்கழல்கள், இணையடிகள். புண்டரிகம், பொன்மலர்கள் ஆகிய அனைத்தும் எம்பெருமான் திருவடியைக் குறிப்பன. 20



ஸ்ரீ நடராஜர்

3. திருப்பள்ளி எழுச்சி

போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது; பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றி, நின் திருமுகத்து எமக்குஅருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடிதொழுகோம்;
சேற்றுஇதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
ஏற்றுஉயர் கொடிஉடை யாய்! எனை உடையாய்!
எம்பெரு மான்!பள்ளி எழுந்துஅரு ளாயே! 1

அருணன்இந் திரன்திசை அணுகினன்; இருள்போய்,
அகன்றது உதயம்; நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ, நயனக்
கடிமலர் மலர,மற்று அண்ணல்அம் கண்ஆம்
திரள்நிரை அறுபதம் முரல்வன; இவைஓர்!
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகட லே!பள்ளி எழுந்துஅரு ளாயே! 2

போற்றி: வணக்கம். வாழ்முதல்: வாழ்விற்கு மூலப்பொருள். புலர்ந்தது: விடிந்தது. பூங்கழல்: அழகிய திருவடிகள். இணைதுணை: ஒத்த இரண்டு. ஏற்றி: தூவி. அருள் மலரும்: கருணை பூக்கும். எழில் நகை: அழகிய புன் சிரிப்பு. தொழுகோம்; வணங்குவோம். சேறு: சகதி. கமலம்: தாமரை. தண்வயல்: குளிர்ந்த வயல்கள்: திருப்பெருந்துறை: ஆவுடையார்கோயில் (மணிவாசகரை ஆண்டவன் ஆட்கொண்ட புனிதத்தலம்) உறை: வீற்றிருக்கும்: ஏற்று உயர்கொடி: சிறந்த இடபக்கொடி. பள்ளி எழுந்தருளாய்: துயில் நீங்கி எழுந்து அருள்பாலிப்பாயாக. 1

அருணன்: செங்கதிரவன். இந்திரன்திசை: கீழ்த்திசை. அணுகினன்: நெருங்கிவிட்டான். அகன்றது உதயம்: உதய ஒளி பரவிற்று கருணையின்: கருணையைப்போல. எழ எழ; மேல் செல்லச் செல்ல. நயனக்கடிமலர்: கண்போன்ற மணம்கொண்ட தாமரை மலர். மலர: விரிய. அண்ணல். பெருந்தகை. அம்கண் ஆம். அழகிய அதன்பாங்கர். திரள். கூட்டம். நிரை- வரிசை வரிசையாக. அறுபதம். ஆறுகால்களையுடைய வண்டு. முரல்வன ஒலிக்கின்றன. ஓர். கருதுவாயாக. 2

கூவின பூங்குயில்; கூவினகோழி;
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்;
ஓவின தாரகை ஒளி; ஒளி உதயத்து
ஒருப்படு கின்றது; விருப்பொடு நமக்குத்
தேவ! நற் செறிகழல் தாள்இணை காட்டாய்!
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
யாவரும் அறிவுஅரி யாய்!எமக்கு எளியாய்!
எம்பெரு மான்!பள்ளி எழுந்துஅரு ளாயே! 3

இன்இசை வீணையர், யாழினர் ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்,
தொழுகையர், அழுகையர், துவள்கையர் ஒருபால்;
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்;
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண்டு இன்அருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி எழுந்துஅரு ளாயே! 4

பூங்குயில்: அழகிய குயில்கள். குருகு: பறவை. இயம்பின: ஒலித்தன. சங்கம்: காலைச்சங்கு. ஓவின: மறைந்துவிட்டன. தாரகை: விண்மீன். ஒளி: வெளிச்சம். ஒருப்படுகின்றது: தோன்றுகிறது. தேவ; இறைவா. செறிகழல்: வீரக்கழல் பொருந்திய. தாளிணை: திருவடிகள் இரண்டினையும். காட்டாய்: காட்டியருள்வாய். 3

இன்இசைவீணையர்: இனிய ஓசை இசைக்கும் வீணையையுடையவர். யாழினர்: யாழ் வாசிப்போர். (வீணைவேறு யாழ்வேறு என ஆகின்றது) ஒருபால்: ஒரு. பக்கம். இருக்கு: வேதமந்திரம். தோத்திரம்: துதிப்பாடல்கள். துன்னிய நெருக்கமாகக் கட்டிய. பிணைமலர்: மலர்மாலை. கையினர்: கையில் ஏந்தி நிற்போர். துவள்பவர்: (உள்ளுணர்ச்சி காரணமாக) ஆடி அசைபவர் சென்னி: தலை. அஞ்சலி கூப்பினர்: தலையிற் கைகுவித்தோர்.

பூதங்கள் தோறும்நின் றாய்எனின் அல்லால்,
போக்குஇலன் வரவுஇலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்,
கேட்டுஅறி யோம்உனைக் கண்டுஅறி வாரை;
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக் கும்அரி யாய்!எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்து,எமை ஆண்டு,அருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி எழுந்துஅரு ளாயே! 5

பப்புஅற வீட்டுஇருந்து உணரும்நின் அடியார்
பந்தனை வந்துஅறுத் தார்;அவர் பலரும்
மைப்புஉறு கண்ணியர் மானுடத்து இயல்பின்,
வணங்குகின் றார்,அணங் கின்மண வாளா!
செப்புஉறு கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
இப்பிறப்பு அறுத்துஎமை ஆண்டுஅருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்து அருளாயே! 6

பூதங்கள்தோறும்: ஐம்பூதங்களிலும். அல்லால்: அல்லாமல். போக்குஇலன்: இறப்புஇல்லாதவன். வரவுஇலன்: பிறப்பும்இல்லாதவன். புலவோர்: அறிஞர். கேட்டுஅறியோம் உனைக்கண்டுஅறிவாரை: உன்னைக்கண்ணால்கண்டு அறிந்தவர்களை இதுவரை கேட்டறியவில்லை. சீதங்கொள்: குளிர்ச்சி பொருந்திய. சிந்தனைக்கும்: மனத்திற்கும். அரியாய்: எட்டாதவனே. ஏதங்கள்: குற்றங்கள். அறுத்து: தொலைத்து. 5

பப்புஅற: மனவிரிவு ஒழிய. விட்டிருந்து: பற்றற்ற நிலையில்நின்று. பந்தனை: பாசத்தனை. மைப்புஉறு கண்ணியர்; அன்புநீர் பெருக்கும் தலைவியர் அணங்கின் மணவாளா: உமையாள்கொழுநா. செப்புஉறு: சிமிழைஒத்த. 6

அதுபழச் சுவையென, அமுதென, அறிதற்கு
அரிதென, எளிதென அமரரும் அறியார்;
இதுஅவன் திருவுரு, இவன்,அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு, இங்கெழுந்து அருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச–
மங்கை உள்ளாய்!திருப் பெருந்துறை மன்னா!
எதுஎமைப் பணிகொளும் ஆறு,அது கேட்போம்;
எம்பெரு மான்!பள்ளி எழுந்துஅரு ளாயே! 7

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்;
மூவரும் அறிகிலர்! யாவர்மற்று அறிவார்?
பந்துஅணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந்து அருளிய பரனே!
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறைஉறை கோவிலும் காட்டி,
அந்தணன் ஆவதும் காட்டி,வந்து ஆண்டாய்;
ஆர்அமு தே!பள்ளி எழுந்துஅரு ளாயே! 8

அது: அப்பரம்பொருள். அமரர்: தேவர். அறியார்: அறியமாட்டார். மதுவளர் பொழில்: தேன்மிகுந்து சொட்டும் சோலை. உத்தரகோசமங்கை: மணிவாசகரின் "நீத்தல் விண்ணப்பம்"என்னும் ஐம்பதுபாடல்களை ஒருங்கே பெற்ற புனிதத்தலம். எது எமைப் பணி கொள்ளும் ஆறு: எம்மை ஏவல் கொள்ளும் முறை எதுவோ. அது கேட்போம்: அதைக்கேட்டு அப்படியே நடப்போம். 7

முந்திய: முற்பட்ட. மூவர்: மும்மூர்த்திகளான சிவன், விஷ்ணு, பிரமன், பந்து அணை விரலி; பந்தை அணைக்கின்ற விரல்களையுடைய அம்பிகை. பழம் குடில் தோறும்: பழைய குடிசைகள் தோறும் செந்தழல். செந்நெருப்பு: புரை. ஒத்த ஆர் அமுதே: நிறைந்த அமுதமே. 8

விண்அகத் தேவரும் நண்ணவும் மாட்டா
        விழுப்பொரு ளே!உன தொழுப்புஅடி யோங்கள்
மண்அகத் தேவந்து வாழச்செய் தானே!
        வண்திருப் பெருந்துறை யாய்!வழி அடியோம்
கண்அகத் தேநின்று களிதரு தேனே!
        கடல்அமு தே!கரும் பே!விரும்பு அடியார்
எண்அகத் தாய்!உல குக்குஉயிர் ஆனாய்!
        எம்பெரு மான்!பள்ளி எழுந்துஅரு ளாயே! 9

புவனியில் போய்ப்பிற வாமையில், நாள்நாம்
        போக்குகின் றோம்அவ மே;இந்தப் பூமி
சிவன்உய்யக் கொள்கின்ற ஆறுஎன்று நோக்கித்
        திருப்பெருந் துறைஉறை வாய்!திரு மாலாம்
அவன்,விருப்பு எய்தவும், மலரவன் ஆசைப்
        படவும்,நின் அலர்ந்தமெய்க் கருணையும், நீயும்
அவனியில் புகுந்து,எமை ஆட்கொள்ள வல்லாய்!
        ஆர்அமு தே!பள்ளி எழுந்துஅரு ளாயே! 10

விண்ணகம்: வானுலகம். நண்ண: அடைய. மாட்டா: முடியாத. விழுப் பொருளே: மேலான பொருளே. உனதொழுப்பு அடியோங்கள்: உனது பணி புரியும் அடிமைகளாகிய நாங்கள். வண்: வளம். வழிஅடியோம்: பரம்பரை அடியார்கள். கண்ணகத்தே: கண்களில் நின்று. என் அகத்தாய்: என்னத் தில் உறைவாய். 9

புவனி: பூவுலகம். பிறவாமையில்: பிறக்காமையாலே. அவமே: வீணாக. மலரவன்: பிரமன். அலர்ந்த: மலர்ந்த. அவனி: பூமி. திருமாலும் பிரமனும் இந்நிலவுலகில் பிறந்து கடைத்தேற விரும்புகிறார்களாம்! ஏன் தெரியுமா? சிவபெருமான் இவ்வுலக உயிர்களை ஆட்கொண்டு கடைத்தேற்றும் வகையை அறிந்ததால். 10

வாட்டமிலா மாணிக்க
வாசக! நின் வாசகத்தை
கேட்டபொழுது அங்கிருந்த
கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும்; பொல்லா
விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில், இங்கு
நானடைதல் வியப்புஅன்றே!

—வள்ளலார்

4. திருப்பள்ளி எழுச்சி

தொண்டரடிப்பொடி ஆழ்வார்
அருளியது.

தனியன்

மண்டங் குடிஎன்பர்
மாமறையோர் மன்னியசீர்த்


தொண்ட ரடிப்பொடி
தொல்நகரம்—வண்டு

திணர்த்தவயல் தென்னரங்கத்து
அம்மானைப் பள்ளி

உணர்த்தும் பிரான் உதித்த ஊர்.

—திருவரங்கப்பெருமாளரையர்

மாமறையோர்: சிறந்த வேதியர்கள். மன்னிய: பொருந்தி வாழ்வதற்கு ஈடான. சீர்: சிறப்பு. தொல்நகரம்: பழைமையான நகரம். திணர்த்த: மொய்க்கப்பெற்ற. தென்னரங்கத்து: அழகிய திருவரங்கத்தில். அம்மானை: ஸ்ரீரங்க நாதனை. பள்ளி உணர்த்தும்: திருப்பள்ளி உணர்த்துபவரான. பிரான்: மிகுந்த உபகாரியாய் உதித்த: அவதரித்த.



ஸ்ரீ அரங்கநாதர்

4. திருப்பள்ளி எழுச்சி

கதிரவன் குணதிசைச் சிகரம்வந்து அணைந்தான்;
கனைஇருள் அகன்றது; காலைஅம் பொழுதாய்;
மதுவிரிந்து ஒழுகின மாமலர் எல்லாம்;
வானவர் அரசர்கள் வந்துவந்து ஈண்டி,
எதிர்திசை நிறைந்தனர்; இவரொடும் புகுந்த
இருங்களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுளது எங்கும்;
அரங்கத்தம் மா!பள்ளி எழுந்தரு ளாயே! 1

கொழுங்கொடி முல்லையின் கொழுமலர் அணவி,
கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ!
எழுந்தன மலர்அணைப் பள்ளிகொள் அன்னம்,
ஈன்பனி நனைந்ததம் இருஞ்சிறகு உதறி;
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
வெள்எயிறு உற,அதன் விடத்தினுக்கு அனுங்கி
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த
அரங்கத்தம் மா!பள்ளி எழுந்தரு ளாயே! 2

கதிரவன்: சூரியன். குணதிசை: கிழக்குத்திசை. சிகரம்: (உதயகிரியின்) உச்சி. அணைந்தான்; கூடினன். கனைஇருள்: அடர்ந்திருந்த இருட்டு. பொழுது ஆய்: பொழுது வர. மா: சிறந்த. மது: தேன். ஒழுகின: வெள்ளமிடா நின்றன. வந்து வந்து: ஒருவருக்கொருவர் முந்திக்கொண்டு வந்து. ஈண்டி: திரண்டு. எதிர்திசை: தெற்குத்திசை. புகுந்த: கூடவந்த. இருங்களிறு: பெரிய ஆண்யானை ஈட்டம்: கூட்டம். பிடி: பெண்யானை. முரசு: பேரிவாத்தியம். அதிர்தலில்: ஒலித்தலினல். அரங்கத்தம்மா: திருவரங்கத்தில் பள்ளிகொண்ட பெருமானே. 1

கொழுங்கொடி: செழுமையான கொடியையுடைய. கொழுமலர்: அழகிய மலர்களை. அணவி: அணைத்துக்கொண்டு. குணதிசை மாருதம்: கீழ்த்திசைக் காற்ருனது. இதுவோ: இதோ. கூர்ந்தது: வீசுகின்றது. மலர்அணை: மலர்ப்பள்ளி. ஈன்பனி: (மழைபோல்) சொரிகிற பனியால். இருஞ்சிறகு: அழகிய சிறகு. பிலம்புரை: குகைபோன்ற. பேழ்வாய்: பெரிய வாய். எயிறு: கோரப்பற்கள். அனுங்கி அழுங்கிய: மிகவும் வேதனைப்பட்ட. ஆனை: (இங்கே) கஜேந்திரன். 2

சுடர்ஒளி பரந்தன சூழ்திசை எல்லாம்;
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப்
படர்ஒளி பசுத்தனன் பனிமதி, இவனோ!
பாயிருள் அகன்றது, பைம்பொழிற் கமுகின்
மடலிடைக் கீறி,வண் பாளைகள் நாற,
வைகறை கூர்ந்தது, மாருதம் இதுவோ!
அடல்ஒளி திகழ்தரு திகிரிஅம் தடக்கை
அரங்கத்தம் மா!பள்ளி எழுந்தரு ளாயே! 3

மேட்டுஇள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்
வேய்ங்குழல் ஓசையும் விடைமணிக் குரலும்,
ஈட்டிய இசை,திசை பரந்தன, வயலுள்
இரிந்தன சுரும்பினம்; இலங்கையர் குலத்தை
வாட்டிய வரிசிலை வானவர் ஏறே!
மாமுனி வேள்வியைக் காத்து, அவபிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்திஎம் அரசே!
அரங்கத்தம் மா! பள்ளி எழுந்தரு ளாயே! 4

சுடர் ஒளி: சூரிய கிரணங்கள். பரந்தன: பரவிவிட்டன. சூழ்திசை எங்கும்: கண்பார்வை புகுமிடம் எங்கும். துன்னிய: நெருங்கிய. தாரகை: நட்சத்திரங்கள். சுருங்கி: குறைவுபட்டு. படர்வுளி: மிக்க ஒளியையுடைய. பனிமதி இவன்: இக்குளிர்ந்த சந்திரனும். பசுத்தனன்: ஒளி மழுங்கினன். பாய்: பரந்த. வைகறை: விடியற்காலம். பைம்பொழில்: பசுமையான சோலை. கமுகு: பாக்கு மரம். வண்: அழகிய. நாற: மணம்வீச. கூர்ந்தது: வீசுகின்றது. அடல்: மிடுக்கு. திகிரி: சக்கரம். 3

மேட்டு இளமேதிகள்; உயர்த்தியும் இளமையும்கூடிய எருமைகள். தளைவிடும்: (மேய்கைக்காக) கட்டவிழ்த்து விடுகிற. ஆயர்கள்: இடையர்கள். விடை: எருது. குரல்: ஓசை. ஈட்டிய: (இவ்விரண்டு ஓசைகளும்) கூடிய. சுரும்பு இனம்: வண்டுகளின் கூட்டம். இரிந்தன: (ஆரவாரித்துக்கொண்டு) கிளம்பின. வாட்டிய: வதைத்த. வரிசிலை: அழகிய சார்ங்கம் என்னும் வில். வானவர் ஏறே: தேவாதி தேவனே. மாமுனி: விசுவாமித்திரமுனி. அவபிரதம் ஆட்டிய: அவப்ருதஸ்நானம் செய்வித்தருளிய. (யாகம் முதலியவை முடித்த பின் செய்யும் ஸ்நானத்திற்கு அவபிரதம் என்று கூறுவர்). அடுதிறல்; ஒழிக்கவல்ல திறமை. 4

புலம்பின புட்களும் பூம் பொழில் களின்வாய்;
போயிற்று கங்குல், புகுந்தது புலரி;
கலந்தது குண திசைக் கனைகடல் அரவம்;
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கல்அம் தொடையல்கொண்டுஅடியினை பணிவான்
அமரர்கள் புகுந்தனர்; ஆதலில்,அம்மா!
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே! 5

இரவியர் மணிநெடும் தேரோடும் இவரோ!
இறையவர் பதினொரு விடையரும் இவரோ!
மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ!
மருதரும் வசுக்களும் வந்துவந்து ஈண்டி
புரவியொடு ஆடலும் பாடலும் தேரும்
குமரதண்டம் புகுந்து ஈண்டிய வெள்ளம்
அருவரை அனையநின் கோயில்முன் இவரோ!
அரங்கத்தம் மா!பள்ளி எழுந்தரு ளாயே! 6

புலம்பின: ஆரவாரித்தன. புட்களும்; பறவைகளும். பூம் பொழில்களின்வாய்: பூக்கள் நிறைந்த சோலைகளிலுள்ள. கங்குல்: இரவு. புலரி: வைகறைப் போது. கனைகடல்: ஒலிக்கின்ற கடல். அரவம்: ஓசை. களிவண்டு: (தேனை உண்டு) களிக்கின்ற வண்டுகள். மிழற்றிய: ஒலிக்கின்ற. கலம்பகம்: பலவகைப் பூக்கள். புனைந்த: கட்டப்பட்ட. அலங்கல் அம் தொடையல்: அழகிய அலங்கல் மாலைகளை ஏந்திக்கொண்டு. பணிவான்: வணங்கும் பொருட்டு. இலங்கையர் கோன்: இலங்கையரசரான விடணன். 5

இரவியர்: பன்னிரண்டு சூரியர்கள். மணி: அழகுமிகுந்த. நெடுந்தேர்: பெரிதான தேர். இறையவர் பதினொரு விடையர்: உலகைக் காப்பவர்களான பதினொரு உருத்திரர்கள். மருவிய; பொருந்திய. மயிலினன்: மயில்வாகனத்தை யுடைய. மருதர்: மருதகணங்கள். ஈண்டி: நெருங்கி. புரவி: குதிரை. குமர தண்டம்: தேவசைன்யக் கூட்டங்கள். வெள்ளம்: திரள். வரை: மலை. 6

அந்தரத்து அமரர்கள் கூட்டங்கள் இவையோ!
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ!
இந்திரன் ஆனையும் தானும்வந்து இவனே!
எம்பெரு மான்!உன கோயிலின் வாசல்
சுந்தரர் நெருக்க,விச் சாதரர் நூக்க,
இயக்கரும் மயங்கினர்; திருவடி தொழுவான்
அந்தரம் பார்இடம் இல்லை;மற்று இதுவோ!
அரங்கத்தம் மா!பள்ளி எழுந்தரு ளாயே! 7

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க,
மா நிதி, கபிலை,-ஒண் கண்ணாடி முதலா,
எம்பெரு மான்!படி மக்கலம் காண்டற்கு
ஏற்பன ஆயின கொண்டு,நன் முனிவர்
தும்புரு, நாரதர் புகுந்தனர்; இவரோ!
தோன்றினன் இரவியும் துலங்கொளிபரப்பி;
அம்பர தலத்தினின்று அகல்கின்றது இருள்போய்;
அரங்கத்தம் மா!பள்ளி எழுந்தரு ளாயே! 8

அந்தரத்து அமரர்கள்: வானுலகத்தேவர்கள். மருதரும்: மருத்கணங்களும். சுந்தரர்: கந்தருவர். விச்சாதரர்: வித்தியாதரர். ஆனை: (இங்கே) ஐராவதம். நூக்க. தள்ள. அந்தரம்: ஆகாயம். முனிவரும். மருதரும் யட்சர்களும் வந்து புகுகையில், கந்தருவர்களும், வித்யாதரர்களும் அவர்களிடையே புகுந்து நெருக்கித் தள்ளுகின்றனர்களாம். 7

வம்பவிழ்: நறுமணம் மிகுந்த, வாயுறை: அறுகம்புல் மா: சிறந்த. நிதி: சங்கநிதி பதுமநிதிகள். கபிலை: காமதேனு. ஒண்: ஒளி பொருந்திய. ஏற்பன ஆயின; தகுதியுள்ளவையான. படிமக்கலம்: உபகரணங்கள். துலங்கு ஒளி: மிக்க ஒளியை. அம்பரதலத்தினின்று: ஆகாயத்தினின்று. அகல்கின்றது: நீங்குகின்றது. 8

ஏதம்இல் தண்ணுமை, எக்கம், மத்தளி,
    யாழ்,குழல் முழவமோடு இசைதிசை கெழுமி,
கீதங்கள் பாடினர் கின்னரர், கெருடர்கள்,
    கெந்தரு வர்அவர் கங்குலுள் எல்லாம்;
மாதவர், வானவர், சாரணர், இயக்கர்,
    சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்,
ஆதலில், அவர்க்குநாள் ஓலக்கம் அருள,
    அரங்கத்தம் மா!பள்ளி எழுந்தரு ளாயே! 9

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ!
    கதிரவன் கனைகடல் முளைத்தனன், இவனோ!
துடிஇடை யார்சுரி குழல்பிழிந்து உதறித்
    துகில்உடுத்து ஏறினர், சூழ்புனல் அரங்கா!
தொடைஒத்த துளவமும் கூடையும் பொலிந்து
    தோன்றிய தோள்தொண்டர் அடிப்பொடி என்னும்
அடியனை அளியன்என்று அருளி,உன் அடியார்க்கு
    ஆட்படுத் தாய்!பள்ளி எழுந்தரு ளாயே! 10

ஏதம்இல்: குற்றமற்ற. தண்ணுமை: சிறுபறை. எக்கம்: ஒரு வகை இசைக் கருவி. மத்தளி: மத்தளம். குழல்: புல்லாங்குழல். முழவமோடு: 1. முழக்கத் தோடு. 2. முழவு என்ற வாத்யத்தோடு. கெழுமி: சேர்த்துக்கொண்டு. இவர்: இதோ மற்றுள்ளவர்களும். கங்குலும் எல்லாம். இரவு முழுவதும். நாள் ஓலக்கம்: பகல்ஓலக்கம். 9

கடி: நறுமணம். கமலம்: தாமரை. கனைகடல்: ஒலிக்கின்ற கடல். முளைத் தனன்: தோன்றினன். துடி: உடுக்கை. சுரிகுழல்: சுருண்டகூந்தல். பிழிந்து: உதறி (நீர்ப்பசையற) பிழிந்து உதறிவிட்டு. துகில்: ஆடை. தொடை ஒத்த: ஒழுங்காகத் தொடுக்கப் பெற்ற. துளவமும்: திருத்துழாய் மாலையும். கூடை: பூக்குடலை. பொலிந்து தோன்றிய: விளங்கி நிற்கப்பெற்ற. அளியன்: கருணைக்குரியவன். ஆட்படுத்தாய்: ஆளாக்குவாய். 10

5. திருவேங்கடவன் மாலை

(ஸ்ரீ வேங்கடேச ஸுப்ரபாதம்)

1 திருப்பள்ளி எழுச்சி
2 துதி
3 திருவடித் துதி
4 மங்கள வாழ்த்து

தமிழ்கவியாக்கம்

ரா. பத்மநாபன்

அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே


'அகல கில்லேன் இறையும்' என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா!

நிகரில் புகழாய்! உலகம்மூன்று
உடையாய்! என்னை ஆள்வானே!

நிகரில் அமரர், முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!

புகல்ஒன்று இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.

— நம்மாழ்வார்.



அலர்மேல்மங்கைத்தாயார் — ஸ்ரீ வேங்கடாஜலபதி

1. திருவேங்கடவன் திருப்பள்ளிஎழுச்சி

கோசலை நன்மக! குணமலி இராமா!
தேசுறு சந்தியை திகழ்ந்திடும் ஆங்கே;
மெய்யின் மெய்,பெறு மானுடர் ஏறே!
தெய்விக நியமம் செய்திடக் கண்விழி! 1

எழுகோ விந்தா! கருடத் துவச!
எழுவாய் கமலையின் இன்னுயிர்த் தலைவா!
அனைத்துல குக்கும் அளிப்பாய் நன்மை;
ஏழுமலை யானே! எம்பெரு மானே! 2

எல்லா உலகும் ஈன்றஎன் அன்னாய்!
பொல்லா மதுகை டபரைப் போக்கிய
மாயோன் மார்பமர் திருவே! தேவீ!
ஆயே! மனங்கவர் ஆர்எழில் உருவோய்!
அண்டினோர் வேட்பதை அருளிடும் சீலமே!
நல்திரு வேங்கட நாயகீ! கண்விழி! 3

குணமலி: குணம்மிக்க. தேசுறுசந்தியை: ஒளிமிகும் வைகறைப்போது. திகழ்ந்திடும்: விளங்கிடும். மெய்யின்மெய்: தயரதன். (''மெய்யின் மெய்யே" எனத் தயரதனைக் கோசலை விளிப்பதாகக் கம்பர் கூறுவார்) ஏறே: ஆண் சிங்கமே. 1

துவசம்: கொடி. கமலை. இலக்குமிதேவி. ஏழுமலையான்: திருவேங்கடவன். 2

மதுகைடபர்: திருமாலிடம் நீண்டகாலம் போரிட்ட இரு அசுரர்கள். (இவர்களின் எல்லையற்ற ஆற்றலை எம்பெருமான் அடக்கி, தன் திருத்தொடையின் மேல் இட்டு இருவரையும் அழித்தார் என்பர்). ஆயே: தாயே. ஆர்எழில் உருவோய்: (அவயவசோபை, ஆபரணசோபைகளோடு கூடிய) நிறைந்த அழகே: வடிவாய் அமைந்தவளே. வேட்பதை: விரும்புவதை. சீலமே: இயற்கையாக உடையவளே. 3

அரவிந்தக் கண்ணி! அருளார் நிதியே!
பிரமன், சங்கரன், இந்திரன் பெண்டிர்
அருள்தரும் உன்னடி அருச்சனை செய்வார்;
திருப்புன் னகைதவழ் திருமதி முகத்தோய்!
திருமலை நாயகி! திருக்கண் மலர்க! 4

அத்திரி முதலிய அரும்பெரும் தவமுடைச்
சத்தமா முனிவரும் சந்தியைத் துதித்து,
ஆகாய கங்கை அதனில் அலர்ந்து,
மாகம் எங்கணும் மணக்கும் தாமரை
மாமலர் ஏந்தியே, மகிழ்வுடன் போற்ற,
மாமகள் தலைவா! மண்டினர் இங்கே;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 5

ஐம்முகன், அயன்முதல் அறுமுகன் இந்திரன்,
செம்மையாம் உன்தன் சேவடி அதனால்
உலகதை அளந்த உயர்புகழ் முதலா,
நலமருள் காதையை நாடியே பாடுநர்;
மொழிப்பதி வியாழனும் முகிழ்த்த மனத்தொடு
மொழிகிருன் தொலைவில், பஞ்சாங்க மொழிகளை;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 6

அரவிந்தம்; தாமரை. பெண்டிர்: மனைவியர். திருமதிமுகம்: சந்திரனை ஒத்த அழகிய முகம். 4

சத்தமாமுனிவர்: பிரமனின் மானஸபுத்திரர்களான ஏழு முனிவர்கள். மாகம்: ஆகாயம். மாமகள்: இலக்குமி. 5

ஐம்முகன்: சிவன். செம்மை: சிறப்பு. காதை: கதை. முகிழ்த்த: தோன்றிய. 6

சிறிதே மலர்ந்த செவ்விய தாமரை
செறிமணம் கலந்து, தென்னை கமுகின்
பாளை நன் மணமும் பாங்காய்ப் பரப்பி,
வேளையே விரும்பும் மந்தமா ருதமும்
திருமலை தன்னில் தண்எனத் திகழ்தலின்,
திருமலை நாதா! திருக்கண் மலர்க! 7

ஆடற் கிளிகள் அழகிய கூண்டுள்
மூடிய கண்களை முழுதும் திறந்து,
கலத்தினில் எஞ்சிய கன்னல் அமுதினை,
பழத்துடன் உண்டு பரவும் உன்பெயர்;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 8

இன்ஒலி எழுப்பும் ஏழிசைத் தந்தி
தன்னைக் கொண்ட தரமிகு விபஞ்சி
வீணையைத் தடவி விரல்விசை நாரதன்
இணைஇலா உன்தன் ஏற்றமார் சரிதையை
ஆழ்வார் முதலிகள் அருளிச் செயலினை
ஏழ்வரை எங்கும் இனிக்க இசைத்தான்;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 9

செவ்விய: அழகிய. செறிமணம்: மிகுந்தமணம். பாங்காய்: நன்குக. வேள்: மன்மதன். திகழ்தலின்: விளங்குதலின். 7

கலம்: பாத்திரம். எஞ்சிய: மிஞ்சிய. பரவும்: துதிக்கும். 8

விபஞ்சிவீணை: நாரதமுனிவரது வீணையின் பெயர். விசை: விரைவு. ஏற்றமார்: புகழ்ச்சிமிக்க. ஆழ்வார் முதலிகள் அருளிச்செயல்: ஆழ்வார்களால் துதிக்கப் பெற்ற நாலாயிரத் திவ்யப்ரபந்தம். ஏழ்வரை: திருப்பதி மலைகள். 9

அருகே உள்ள அரவிந்த ஓடையில்
மருவார் தாமரை மலரின் பொகுட்டில்
சுரும்பின் இனங்கள் சுவையார் தேனை
விரும்பி, மாந்தி நின்புகழ் முரலும்;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 10

ஆயர் மங்கையர் அங்கை வருந்த,
தோயும் வெண்தயிர் துமியெழக் கடையும்
மத்தொலி தயிர்ஒலி மல்கி நிறைந்து
எத்திசை களிலும் எதிர்ஒலி செய்யும்;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 11

கதிரவன் தோழியாம் கமல மலரினில்
வதியும் வண்டுகள் வண்கு வளைதன்
கருநிற எழிலைக் காணப் பொறா அது,
அரவணைத் துயிலும் அரியின் அழகிய
கருமை எமக்கே உரிமைஎன் கழறி
உரக்க முரலும், ஓவா முழக்கால்;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 12

மருவார்: மணம்மிக்க. பொகுட்டு: மலரின் உட்பகுதி. சுரும்பின் இனங்கள்: வண்டுக் கூட்டங்கள். மாந்தி: நிறையப்பருகி. முரலும்: இசைக்கும். 10

அம்கை: அழகிய கை. துமி: திவலை. மல்கி: பெருகி. 11

கதிரவன்: சூரியன். வதியும்: வசிக்கும். வண்: செழிப்பான. அரவுஅணை: ஆதிசேடனாகிய படுக்கை. கழறி: கூறி; இடித்துரைத்து. முரலும்: ரீங்காரம் செய்யும் ஓவா: இடைவிடாத. 12

கோரும் வரமெலாம் கொடுக்கும் கோவே!
திருமகள் நேயா! திருவளர் செல்வா!
உலகோர் உறவே! ஒருதயைக் கடலே!
அலர்மேல் மங்கை அகலாது உறையும்
திருமணி மார்பா! திரண்ட தோளா!
உருவப் பேரெழில் உத்தம! தேவே!
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 13

கோபுர வாயில், நின் குமரன், சிவனொடு
தாபத சனந்த சனாதனர் முதலோர்
மேலுறு நிலையை மீதுறல் வேண்டி,
ஏலவே இறைபுட் கரணியில் ஆடி,
உள்ளும் புறமும் உற்றனர் தூய்மை;
உள்ளம் உவப்ப உருகியே நிற்பரால்,
பெருமைசால் பிரம்பால் தைவரப் பெற்றே;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 14

கோரும்; விரும்பும். கோவே: அரசே. ஒருதயைக்கடல்: ஒப்பற்ற கருணைக் கடல். 13

நின்குமரன்;உன் புதல்வனான பிரமன். தாபத: தவசிகளான. மீதுறல்வேண்டி மிகவும் பெறவேண்டி: ஏலவே: உரியவாறு. இறைபுட்கரணி: சுவாமிபுட்கரணி என்னும் திருமலையிலுள்ள தீர்த்தம். பெருமைசால் பிரம்பு: பெருமாளின் மெய்க்காப்பாளரான சேனை முதலியாரால் அவரவர் தகுதிக்கேற்ப அமர்த்த உதவும் பொற் பிரம்பு. தைவரல்: தடவப்பெறல். 14

திருப்பதித் திருமலை, திருப்புள் மாமலை,
திருப்பணி மாமலை, திருவிடை மாமலை,
திருவேங் கடமலை திருநா ரணன்மலை
என்னும்நீ அமர் எழிலார் மலைகளை
இன்பமாய்ப் பரவி இசைப்பார் பத்தர்;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 15

இந்திரன் அரனொடும் இயமன், நிருதி,
செந்தீ, காற்றொடு அளகை இறைவன்,
வருணன் ஆனோர் வந்தனர் விரும்பி; உன்
திருவடி பணியத் திருக்கை குவித்தார்;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 16

கருடன்,ஐ ராவதம் கான்முழைச் சிங்கம்
உருவார் உச்சைச் சிரவம், உரகமன்
மதிமிகும் அனந்தன் ஆதியோர், மன்அருட்
கதிதனைக் கண்டு, காமுற்று, அவரவர்
தந்தாம் நடைகளின் தாங்கள் மேம்படச்
சிந்தையிற் கொண்டே சேர்ந்தனர் கோயில்;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 17

திருப்புள்: (பெருமாள் திருவுள்ளப்படி இயங்கும் தெய்வ நலமுடைய) கருடன். திருப்பணி: ஆதிசேடன். (பகவானுடைய கைங்கர்யத்துக்குத் தகுதியாகக் குடை, சிங்காதனம், பாதுகை, திருப்பரிவட்டம் முதலான வேறுபட்ட சரீரங்களைக் கொண்டு எல்லாவிதமான பணிகளையும் செய்யும் திருஅனந்த ஆழ்வான் என்னும் தொனிப் பொருளும் தோன்ற திருப்பணி எனப்பட்டது. இளைய பெருமாளும் ஆசிசேடனே.) திருவிடைமாமலை. திருப்பதி மலைகளுள் ஒன்றாகிய திருஇடபமாமலை. 15

செந்தீ: தீக்கடவுள். அளகை இறைவன்: குபேரன். 16

கான்முழை: காட்டிலுள்ள குகை. உருவார்: அழகிய வடிவுள்ள. உச்சைச் சிரவம்: பாற்கடலில் பிறந்து இந்திரனுக்கு அளிக்கப்பட்ட குதிரை.

உரகமன் மதிமிகும் அனந்தன்: பாம்புகளின் அரசனான, புத்திக்கூர்மையுள்ள ஆதிசேடன். மன்: நிலைபெற்ற, கதி: நடை. 17

சுடரோன், சந்திரன், செவ்வாய், சூழ்புதன்
சுடரும் பொன்னொளித் தொல்புகழ் வியாழன்,
சுக்கிரன், சனி,மா சுணஇரு கோள்கள்,
வக்கிரம் விடுத்துன் மாணடி யார்தம்
அடியார்க்கு அடியார் அடியார்தம் அடியராய்,
அடியரின் வழிவழி அடியவர் ஆகி,
திருமலை தன்னைத் தேடியே வந்தனர்;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 18

ஒன்பது கோள்களும் உன்தன் திருவடிப்
பொன்அவிர் துகளதைப் போற்றித் தலைமிசை
தரித்தபின் மோட்சத் தகுதியும் வேண்டார்;
வரன்முறைக் கற்பம் வரும்என அஞ்சி,
திகைத்துன் கோயிலின் திருமுனம் அணைந்தார்;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 19

விண்ணுலகு ஏகும் மானுடர் மேல்நிமிர்
விண்ணுயர்க் கோபுர வியன்முடி கண்டு,
புத்தேள் வாழ்வினைப் போற்றலம் என்றே,
இத்தரை மனிதராய் இவ்உல கத்தே
பிறந்திட, நின்னை வேண்டுவர் பெரிதே!
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 20

சுடரோன்: சூரியன். சுடரும்: பிரகாசிக்கும். மாசுண இருகோள்கள்: இராகு, கேது என்னும் இருபெரும் பாம்புகள். மாணடியார்: சிறந்த தொண்டர். 18

ஒன்பது கோள்கள்: நவக்கிரகங்கள். பொன் அவிர்: பொன்போல் ஒளிவிடும். தலைமிசை: தலையின் மேல். வரன்முறைக்கற்பம்: நியதிக்குட்பட்ட கல்பம் என்னும் ஊழி. 19

புத்தேள்வாழ்வு: மோட்ச வாழ்வு. 20

திருமகள், மண்மகள் கேள்வனே! திருவார்
கருணையே முதலிய குணங்கெழு கடலே!
உலகோர் அடையும் ஒருதனிப் புகலே!
கருடன், அனந்தன் கைதொழுது ஏத்தும்
திருவடி உடையாய்! தேவர்தம் தேவே!
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 21

பற்ப நாபா! பரபுரு டோத்தமா!
பொற்புடை வாசு தேவனும் புகழுடை
மாதவ! சனார்த்தன! மலர்க்கை ஆழியாய்!
மாதவர் மேவிடும் வைகுந்த பதியே!
திருமறு மார்பா! சரணவான் தருவே!
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 22

காமன் செருக்குஅழி கவின்உறு வடிவோய்!
காமர் எழிலுடைக் கமலையின் குய்யத்
தாமரை மொக்கில் தங்கிய கண்ணாய்!
மங்கல! நின்மல! மகிழ்குணக் குடிலாய்!
பொங்கிய இன்பம் புகழ்மிகு நிலையே!
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 23

மண்மகள்: பூமாதேவி. கேள்வன்: கணவன். கெழு: மிகுந்த 21

பற்பநாபா: பதுமநாபா. பொற்பு: அழகு. ஆழி: சக்கரப்படை.
திருமறு: ஸ்ரீவத்ஸம். வான்தரு: கற்பக மரம். 22

காமன்: மன்மதன். கவின்: அழகு. காமர்: அழகிய. குய்யம்: தனம். 23

மீனுடன் ஆமை மிகுகோல, நரசிங்கம்,
வானொடு மண்ணும் வாழ்த்திய வாமனு!
விண்ணொடு மண்ணும் விரிந்த விக்கிரம!
திண்ணிய பரசுத் தெறலுடை ராமா!
கானும் கடலும் கடந்தகா குத்தா!
ஆன்இடைக் குலம்வரும் அடல்பல ராமா!
கானும் மலையும் காலிமேய் கண்ணு!
ஊனுல கில்இனி உருவுகொள் கற்கி!
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 24

ஏலம், இலவங்கம், கற்பூரம் கலந்த
கோலவான் கங்கைக் குளிர்நீர் நிறைந்த
பொற்குடம் சுமந்து புண்ணிய அந்தணர்
நற்பொழுது இதுஎன நண்ணினர் மகிழ்ந்து,
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 25

கதிரவன் எழுந்தனன்; கமலங்கள் மலர்ந்த;
துதிசெயும் பறவைகள் துன்னியே இசைத்த;
இன்னிய ஒலிகளும் எண்திசை சேரும்;
இன்னிசைப் பல்லாண்டு எழுப்பிட வைணவர்
திருமலைத் தேவ!நின் தொழுது நிற்கின்றூர்;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 26

கோலம்: பன்றி. திண்ணியபரசு: வலிய கோடாலி. தெறல்: அழிப்பாற்றல். காகுத்தன்: இராமன்: ஆன்: பசு: அடல்: ஏனையவற்றின் வலிமைகளை மேலெழச் செய்தல். 24

கோலவான்கங்கை: அழகிய விண்ணுலகக் கங்கை. நண்ணினர்: அடைந்தார். 25

துன்னியே: நெருங்கியே. 26

பிரமன் முதலாம் பெருந்தே வர்களும்
இருந்தவர் இருடியர் சாது சனந்தனர்
ஆதிய யோகியர் அனைவரும் அன்புடன்
பூசித சோபானப் பொருள்மிக ஏந்திநின்
திருமலைக் கோயிலின் திருமுன் அடைந்தனர்;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 27

திருமகள் நிலையமே! தேவனே! மறுவிலி!
அருங்குணக் கடலே! அன்பர்க்கு இனியாய்!
மறைமுடி உணரும் மாண்பார் உட்பொருள்!
பிறவிப் பெருங்கடல் தாண்டுபேர் அணையே!
திருவேங் கடவா! திருக்கண் மலர்க! 28

வேங்கட நாதனை விழித்தெழுந் தருளப்
பாங்கார் பண்அமை பாடலை இவ்வணம்
நாளும் வைகறைப் பாடும்நல் அடியரை
மூளும் அன்பின் முனைப்பொடு மனத்தே
நினைபவர் பரமாம் நெடும்பதம் நல்கும்
நினைவுறு ஞானம் பெறுகுவர் நெடிதே. 29

இருந்தவர்: பெரிய தவசிகள். பூசித: பூசைக்குரிய. சோபானப்பொருள்: கண்ணாடி முதலியன. 27

நிலையம்: வசிக்கும் இடம். மறுவிலி: குற்றமற்றவனே. மறைமுடி: உபநிடதம். 28

பாங்கார்: அமைப்பான. பண்அமைபாடல்: எக்காலத்தும் இசை நலம் பொருந்திய பாடல். இவ்வணம்: இவ்வாறு. வைகறை: விடியற்காலை. முனைப்பொடு: கூரிய நினைவொடு. 29

2. திருவேங்கடவன் துதி

கமலைக் குயமுலைக் குங்குமக் கலப்பால்
நிமலா! நின்கரு நிறமும் சிவக்கும்;
கமலக் கண்ணா! கார்நிற வண்ணா!
உலகின் இறையே! உத்தம! தேவே!
விமலா! வேங்கட நாதா! வெல்க! 1

நான்முகன், சண்முகன், நற்சிவன் ஆனோர்
தாம்முடி சூடும் தலைஅணி மணியே!
சரணம் அடைவோர் சால்புடை வைப்பே!
திருவேங் கடவா! திருஅருள் புரியே! 2

எண்ணில் அடங்கா எல்லையில் பிழைகள்
பண்ணியே நாளும் பழகிடல் ஆனேன்;
நீயும் பொறுக்க நினைந்திட அறிதால்!
ஆயினும் வேங்கட! அன்பால் அணைந்தேன்;
தாயினும் நல்லாய்! தண்ணளி தாராய்! 3

திருவேங் கடவா! திருமிகு வள்ளால்!
விரும்பும் பொருளினை மிகைதர வல்லாய்!
அருமறை புகலும் ஆழ்ந்த பொருளே!
விரைமல ராளின் விருப்பார் நேயா!
உரைசெயப் பரம்அஃது உன்னிலும் யாரே? 4

நிமலா: தூயவனே: விமலா: அழுக்கற்றவனே. 1

சால்புடைவைப்பே: ஆன்றமைந்த பண்புகளின் கொள்கலமே. 2

தண் அளி: குளிர்ச்சிமிக்க கருணை. 3

மிகை: அதிகமாக. விரைமலராள்: மணமிக்க மலரின்மேல் அமரும் திருமகள். 4

இன்குழல் இசைக்கும் இன்ஒலி மடுத்தே
தன்வயம் இழப்பர் தகவுடைக் கோபியர்;
எண்ணில் கோடி இடைமகள் சூழினும்
கண்ணன் தனித்தனி களிஉரு ஆவான்;
திண்ணிய வசுதே வன்திருச் செல்வன்
கண்ணனில் பரமாம் கடவுளை அறியேன்! 5

விழையும் நற்குண வியன்பெரு நிலய!
பிழைஇல் தயரதன் பெருமிதப் பேறே!
உலகெலாம் ஒப்பில் உயர்தனுச் செல்வ!
இலகுஉளம் மாருது இணைந்திடு தீர!
இரகுவழித் தலைவா! இராமனே! எங்கும்
பரந்திடு பொருளே! பண்புஅருட் கடலே!
திருவின் கேள்வா! திருவரம் தருவாய்! 6

நிலமா மகள்-மகள் நேயக் கையான்;
நிலவொடு தாமரை நேர்முகம் உடையான்;
இராவண இருளை அழித்திடும் கதிரோன்;
பராவரும் இராமனைப் பணிந்தேன் பாங்குற. 7

இன்முகன்! நன்மனன்! எளியவர் நேயன்!
இன்புறும் முத்தி இரங்கி அளிப்போன்;
நிகர்சால் தம்பியன்; நிகரில் எழிலான்;
வீணில் செல்லா விசையார் கணையன்;
பூணேன் இராமனின் பொன்னடி அல்லால். 8

மடுத்தே: காதால்கேட்டு. தகவுடை; சிறப்புடைய: இடைமகள்: ஆயர்மகள். திண்ணிய: திடமான. 5

விழையும்: விரும்பும். பெருமிதப்பேறே: கல்வி. தறுகண், இசை. கொடைகளால் பெறத்தக்க மேம்பாடே. ஒப்பில்: உவமை இல்லாத. இலகு; விளங்கும். 6

நிலமாமகள் மகள்: பூமிப்பிராட்டியின் மகளான சீதை. நேர்: ஒப்பான. பராவரும்: முழுவதும் புகழநினைத்துப் புகழப் புகழப் புகழ்ந்து முடியாத. 7

வேங்கட நாதனின் வேறொரு தெய்வம்
பாங்குடன் அறியோம் பாருல கதனில்;
வேங்கட நாதனை விரும்பிய மனத்தேன்;
வேங்கட நாத! மேல்அருள் வழங்கே!
வேங்கட நாத! விரும்பும் வரமளி. 9

விருப்பாய் சேய்மை வியன்வழி வந்தே,
திருவடித் தாமரை சேவித்து நின்றேன்;
ஒருமுறை உன்தன் காட்சி காணின்,
திருவடி தன்னைத் தினமும் காணும்
அரிதினும் அரிதாம் ஆக்கம் கூடும்
அருளினை ஈந்தே, ஆட்கொள்! ஆட்கொள்! 10

அரியே! வேங்கட மலையின் அணியே!
புரியேன் புரிந்த பொல்லாச் செயலினை
உன்னுவது அரிதே! உன்தன் நல்லருள்
உன்னியே வந்தேன்; உன்முகம் காட்டி,
மன்னித்து அருள்வாய்! மலைமுடி மணியே! 11

நிகர்: சமமான. விசையார்: வேகம்மிக்க. 8

சேய்மை: நீண்ட தூரம். வியன்: வியக்கத்தக்க. 10

உன்னுவது: நினைத்துப்பார்ப்பது. 11

3. திருவேங்கடவன் திருவடித் துதி

அனைத்துலகும்அளி அன்புடைத் தலைவி!
கனைகுரல் அருவிக் கவின்மலை சேரும்
வேங்கட நாதன் வேட்புறு மனையோய்!
பாங்காய் அவனுடைப் படர்ஒளி மார்பில்,
'அகலகில் லேன்' என அன்பால் உறைவோய்!
அகலாது அவனின் அரும்கமை வளர்ப்போய்!
தாமரை மலர்அணித் தளிர்முன் கையோய்!
தாமரை மலர்மிசைத் தவிசுடைத் திருவே!
அன்பு முதலாம் அருங்குண ஒளியே!
அன்பார் பகவதி! அவனியின் அன்னாய்!
உன்பதம் தொழுதேன்; உயர்நலத் திருவே! 1

கமலை நாதா! கருணைமாக் கடலே!
விமலா! உலகின் விளக்கம் ஆவாய்!
எல்லாம் அறிவோய்! யாதும் வல்லோய்!
எல்லாச் செயலின் ஈறும் பயனே!
எளியோர் அன்பே! எளிமைத் தலைவா!
அளிவான் தருவே, அண்டினவர்க்கு;
திருவேங் கடவா! திருவடி சரணம். 2

அளி: காப்பாற்றும். கனைகுரல்: ஒலிக்கின்ற குரல். கவின்: அழகிய. அரும் கமை: அரிதான பொறுமை. தவிசு: இருக்கை. அவனி: உலகு. 1

ஈறு: முடிவு. அளிவான்தரு: விரும்புவன எல்லாம் கொடுக்கவல்ல விண்ணுலகக் கற்பக மரம். 2

திருவா! உன்தன் திருவடிச் சிலம்பை,
மருவார் மலரால் மறைத்திட் டாலும்,
திருவடி மணமே திறமதில் விஞ்சும்;
திருவார் மென்மைத் திருவடிக் காட்சி,
எம்பொழு தும்மே இன்பம் ஆயினும்,
அப்பொழு தப்பொழுது இன்பம் புதிதால்!
திருவேங் கடவா! திருவடி சரணம். 3

அப்பொழுது அலர்ந்தே அழகுற விரியும்
செப்பரும் தாமரைச் செவ்வியை, உலகோர்
உன்னுடை எழிலார் இணைஅடி ஒக்கும்
என்னவே கூறி ஏத்திடும் உவமை,
கட்டுரை யன்று களிமயக் குரையே;
மட்டுமிழ் மாமலர் மாண்அடி யோயே!
திருவேங் கடவா! திருவடி சரணம். 4

மருவார்: மணம்மிக்க. விஞ்சும்: மேம்பட்டு நிற்கும். 3

அலர்ந்தே: மலர்ந்து: செப்பரும்: உரைத்தற்கு அரிய. செவ்வி: அழகு. ஏத்திடும்: புகழ்ந்திடும். மட்டு: தேன். மாண்அடி: சிறப்புமிக்கத் திருவடி. (வேறுபாடின்றி அனைத்துயிர்க்கும் அருளிய அளந்த திருவடி) 4

அருபரம் நினை ஆற்றிடு மாப்போல்,
உருவமை திருவடி உட்புறம் அதனில்,
மங்களக் கோடுகள் மாண்புற இலகி,
தங்கள் எழிலினைத் தாம்உரை செய்யும்;
அங்குசம், தாமரை, அணிஆர் ஆழி,
குடையொடு அமுதக் குடங்கள், குலிசம்,
கொடியொடு சங்கம், கொடுக்கும் கற்பகம்
என்னும் வடிவதில் எழுதிய போலும்!
என்னுடை அன்பே! எழுமலை யானே!
திருவேங் கடவா! திருவடி சரணம். 5

பதும நாபா! பாற்கடல் அணைவோய்!
பதுமக் கற்கள் பரப்புசெந் நிறத்தை,
உன்திரு அடியின் உட்புறச் செம்மை,
தன்திரு ஒளியால் தருக்கிடும் வெற்றி;
திருவடிப் புறத்தே திகழ்வுறும் கருமை,
கருமணி கக்கிடும் கார்நிறம் வெல்லும்;
வாள்உகிர் வெண்மை வாள்நிலா வீழ்த்தும்;
தாள்நிறத் தன்மைத் தரமிடல் ஆமோ?
திருவேங் கடவா! திருவடி சரணம். 6

ஆற்றிடும்: கூறிடும்: இலகி: விளங்கும். ஆழி: சக்கரம். (திருவேங்கடவன் திருவடிகளின் உட்புற ரேகைகள் பரம்பொருள் இலக்கணத்துக்கு ஏற்ப அமைந்துள்ளன.) 5

பதுமக்கல்: பத்மராகம் என்னும் சிவப்பு மிக்க கல். தருக்கிடும்: பெருமை கொள்ளும். கக்கிடும்: வெளியிடும். கார்நிறம்: மேகவண்ணம். வாள்உகிர்: ஒளி பொருந்திய நகம். வாள்நிலா: ஒளிமிக்க நிலவு. வீழ்த்தும்: போக்கடிக்கும். தாள்: திருவடி. 6

அன்பொடு கமலையாள் அச்சம் அளாவி,
தன்திருக் கரமாம் தளிரால் வருட,
உன் திரு அடியும் உடனே வாடும்;
தன்திருத் தன்மை தரமிகு மென்மை;
உன்அரு ளல்லால் உரைத்திடப் போமோ?
திருவேங் கடவா! திருவடி சரணம். 7

நிலமகள், மலர்மகள், நீள்குண நேர்வார்,
வலமுடை நீளைஎன் வான்புகழ் மனையர்,
கரமாம் தளிர்கொடு காதலாய் வருட,
வரம்தரும் வாள்அடி வனப்பாய்ச் சிவக்கும்;
திருவேங் கடவா! திருவடி சரணம். 8

அரன்,அ யன்ஆதி அண்டக் குலத்தார்
வரன்மு றையாக வணங்குவர் நாளும்;
அவருடை முடிகளில் அணியுறும் ஒன்பான்
கவர்ஒளி மணிகள், கவின்உடை உன்தன்
அடியிணை தனக்கு,அம் கற்பூரம் காட்டும்;
திருவேங் கடவா! திருவடி சரணம். 9

அச்சம்: பயம். அளாவி: கலந்து. வருட: தடவிவிட. 7

நிலமகள்: பூதேவி. மலர்மகள்: இலக்குமி தேவி. நீள்குணநேர்வார்: பெருங் குணத்தில்ஒப்பானவர்: வலம்: வெற்றிப்பொலிவு. நீளை: நீளாதேவி. மனையர்: மனைவியர். வாள்அடி: ஒளிபொருந்தியதிருவடி. வனப்பு: அழியா அழகு. 8

அண்டக்குலத்தார்: தேவர்கள். வரன்முறை: நியதிப்படி. அணியுறும்: அழகு செய்யும். ஒன்பான் கவர் ஒளிமணிகள்: ஒன்பதாக அமைந்த மனங்கவர் ஒளிவிடும் இரத்தினங்கள். இணை: இரண்டு அம்: அழகிய. 9

விட்ணுவே பரம்பதப் பொருளென வேதம்
இட்டமாய் ஏத்தும்உன் இணைஆர் அடிகளை;
மறைமுடி, அதனையே மாந்தி மகிழும்;
அறைதற்கு அரியஉன் அறைகழல் அவைதாம்,
அன்புடன் மீண்டும் அடியோம் காண,
அன்புடை வலக்கை அழகாய்ச் சுட்டிட,
திருவேங் கடம்தனில் திருநிலை கொள்ளும்;
திருவேங் கடவா! திருவடி சரணம். 10

பாரதப் போரில் பார்த்தனை உந்தும்
பார்த்தசா ரதியே! பண்பார் உரையால்,
‘என்னையே நம்புவாய்! ஏதமே வாரா!
என்னையே சரண்அடை! ஏக்கம் கொள்ளேல்!’
என்னவே கூறி, உன் ஏருடைப் பாதம்
தன்னையே காட்டித் தஞ்சம் அளித்தாய்;
திருவேங் கடம்தனில் திருவடி தன்னை
இருவினை யேனும் எளிதாய்க் காண,
வலக்கரம் தாழ்த்தி வணங்குவான் வைத்தாய்!
திருவேங் கடவா! திருவடி சாணம். 11

அறைதற்கு: சொல்லுதற்கு. அறைகழல்: ஒலிக்கும் வீரக்கழலணிந்த திருவடி. 10

உந்தும்: ஈடுபடுத்தும். ஏதம்: துன்பம். ஏருடை: அழகிய 11

ஏழையன் ஏதலன் என்தன் தலைமிசை,
ஏழையாம் ஆயர்தம் ஏறதாய், காளியன்
பணிமுடித் தலைமிசை, பரலுடை முட்புதர்,
படர்கான் நெறிமிசை, பகர்மறைச் சிரமிசை,
தடவரை சூழ்உயர்த் திருமலை முடிமிசை,
பிறிதொரு தெய்வம் பேணார் மனமிசை,
சிறிதெனப் பெரிதெனச் சீர்வளர் உன்தன்
திருவடி தன்னால் தீண்டி மகிழ்ந்தாய்!
திருவேங் கடவா! திருவடி சரணம். 12

வாடா மலராம்உன் வான்உயர் திருவடி,
நாடா வருவோர் நயந்து அருச்சிக்கும்
திருவுடை மலரைத் திறமாய்ச் சூடும்;
திருமலை தனக்குத் திருமுடி அணிஆம்;
அனைவர் கண்களின் ஆனந்தக் காட்சி;
அனைவர் மனத்தினின் ஆனந்த நிலையம்;
திருவேங் கடவா! திருவடி சரணம். 13

சரண்புகு வோர்தாம் சாலவே மூழ்கி,
அரண்என வே தாம் ஆனந்தம் உறுவர்;
பசித்திடும் சேய்க்குப் பால்நினைந்து ஊட்டும்
கசிந்திடும் அன்புடை அன்னையின் மார்பாம்
அமுதார் கலசத்து ஆரமுது ஆகும்,
அமுதனே! ஒப்பில் அழகுஉமிழ் இணையடி;
திருவேங் கடவா! திருவடி சரணம். 14

ஏதலன்: திக்கற்றவன். ஏழையாம்ஆயர்: வலக்கை, இடக்கை அறியாத இடையர். ஏறு: இடபம்: காளியன்: காளிங்கன் என்னும் கொடியபாம்பு. பணி முடி: படம். பரல்: சிறுசிறு கற்கள். படர்கான்: நீண்டகாடு. நெறி: வழி. தடவரை: பெரிய மலை. பேணார்: தொழார். சீர்: சிறப்பு. மிசை: மேல் 12

வான்உயர்: விண்ணளவு உயர்ந்த. நாடா: நாடி. நயந்து: விரும்பி. 13

சாலவே: நன்முக. அரண்: பாதுகாப்பு. ஒப்பில்: உவமையில்லாத. 14

நற்குணம் நிறைந்தோர் நாளும் வணங்கும்
சற்குணன்; தாமரைச் சரணுடை நாதன்;
மிளிர்ஆர் தேசுடை மணவாள மாமுனி
குளிர்ஆர் கடைக்கணால் குவலயம் வாழ,
பிறவிப் பெருங்கடல் தாண்டுபேர் அணைஎன,
மறைமுடி போற்றும் மாசறு பொருளாய்க்
காட்டிய, உன்னுடைக் கழலிணை எளியன்
வாட்டம் இன்றியே வாழ்த்திடத் தாராய்,
திருவேங் கடவா! திருவடி சரணம் 15

திருவேங் கடவா! திருமகள் கேள்வா!
திருவாம் உன்தன் திருவுடைப் பிராட்டி,
அடைவழி நீஎனின் அணைப்பாள் உன்னுடன்;
அடைபயன் நீஎனின் அதுவே ஆவாள்;
இத்தகைத் திருவாள் என்றுமே அடையும்
எத்தகை மாசுமில் எழில்குண நலத்தோய்!
உனக்கே தொண்டன்ஆம் உறுதியும் பூண்டேன்;
எனக்கென ஏதும் எண்ணவே மாட்டேன்;
திருவேங் கடவா! திருவடி சரணம். 16

திருவேங்கடவன் திருவடித்துதி முற்றிற்று.

மிளிர்ஆர்தேசு: சுடர்விடும் கதிர்நிறைச் சோதி. மாசறு: குற்றமற்ற. 15

பிராட்டி: திருமாமகள். அடைவழி: உபாயம். அடைபயன், உபேயம். 16

4. திருவேங்கடவன் மங்கள வாழ்த்து

மலராள் மணாள! மங்கல வைப்பே!
நலமருள் நாயக! நாடுவோர் நிதியே!
திருவேங் கடம்தனில் திருப்பதி கொண்டோய்!
திருமகள் நிலய! தேவனே! மங்களம்! 1

திருமகள் காதலால் திளைத்து நோக்குறும்
திருவுற வளைந்த திருப்புரு வக்கணா!
அனைத்து உலகுக்கும் அருள்தரு கண்ணே!
அனைவரும் போற்றும் ஆனந்த வாழ்வே!
திருவேங் கடவா! தேவனே! மங்களம். 2

திருவேங் கடமலைத் திருமுடி தனக்குத்
திருவினைத் தந்திடும் தேசுடை அடியோய்!
மங்கள நிலையமே! மாமலை வாழ்வே!
திருவேங் கடவா! தேவனே! மங்களம். 3

அங்கம் அனைத்திலும் அழகொளிர்த் தேசால்,
மங்களம் வழங்கி, மாநிலம் அதனில்,
மக்கள் முழுமையும் மயங்கிடச் செய்வோய்!
திருவேங் கடவா! தேவனே! மங்களம்! 4

அழிவிலி! மறுவிலி! ஆனந்த உருவே!
அழிவிலா ஞானமே! அனைத்தின் உயிரே!
மேலவர் போற்றும் மெய்ப்பொருள் வடிவே!
திருவேங் கடவா! தேவனே! மங்களம்! 5

திளைத்து: மகிழ்ந்து. திருவுற: அழகுடன். கணா: கண்ணுடையவனே. 2

தேசு: ஒளி. 3

மேலவர்: விண்ணோர். 5

அனைத்தும் தானே அறிந்திடும் அறிவோய்!
அனைத்தும் வல்லாய்! அனைத்தின் தலைவா!
எளிமையின் எந்தாய்! எளியவர் அன்பா!
திருவேங் கடவா! தேவனே! மங்களம். 6

அருபரம் பொருளே! அரும்பர மாத்மா!
கோருவ முழுமையும் கொண்டலின் பொழிவோய்!
அனைத்தும் நடாத்தும் அனைத்துஉயர் பொருளே!
திருவேங் கடவா! தேவனே! மங்களம். 7

காலக் கடைவரைச் சோர்விலாது ஏத்தும்
சால்புடைப் பத்தர் சாவாச் சீர்பெற
அப்பொழு தத்தவாம் ஆரா அமுதே!
திருவேங் கடவா! தேவனே! மங்களம். 8

மிகஎழில் கொழிக்கும் மின்னொளிர் இணையடி
மிகவாக் காட்டி, மின்நிலை மாந்தர்க்கு
"என்அடி சரண்அடை" என்னவே வலக்கை
தன்னால் வனப்பாய்த் தாள்நிலை சுட்டினோய்!
திருவேங் கடவா! தேவனே! மங்களம் 9

எந்தாய்: ஏந்திய நற்குணப்பெருக்கே. 6

கோவை: விரும்புவ. கொண்டலின்: மேகம் போல். நடாத்தும்: நடத்திச் செல்லும். 7

காலக்கடை: காலஎல்லை. சாவா: இறப்பில்லாத. சீர்: சிறப்பு அப்பொழுதத்தவாம் ஆராஅமுதே: "அப்பொழுதைக்கு அப்பொழுது என் ஆராஅமுதே" என்பார் நம்மாழ்வார். 8

மின்நிலை: மின்னலைப்போல் நொடியில் தோன்றிமறையும் நிலையுள்ள. மாந்தர்: மனிதர். 9

அருளார் கடலின் அமுதார் அலைகளால்
அருந்தன் கடைக்கணல் ஆரவே நனைப்போய்!
திருவேங் கடவா! தேவனே மங்களம். 10

நல்அணி நல்தொடை, நல்உடை, நற்படை
நல்எழில் வடிவோய்! நானிலப் புகலே!
அனைவர் துயரையும் அகற்றும் அரசே!
திருவேங் கடவா! தேவனே! மங்களம்.

பரமாம் பதத்தின் பற்றையும் துறந்தோய்! 11
பரமாம் இறைபுட் கரணியின் பாங்கர்
திருமகள் தன்னொடும் திளைத்து மகிழ்வோய்!
திருமலை தன்னில் திருப்பதி கொள்வோய்!
திருவேங் கடவா! தேவனே! மங்களம். 12

மணவாள மாமுனி மாண்புசால் மனத்தில்,
கணமுமே மறவாக் காதலர் நெஞ்சில்,
எப்பொழு தும்உறை எழில்ஆர் உருவோய்!
எப்பொருள் தன்னிலும் உட்பொருள் ஆவோய்!
திருவேங் கடவா! தேவனே! மங்களம். 13

மங்களம் இசைப்போர், எங்கள்நல் ஆசான்,
பொங்கும்-இந் நூலாம் பொருளினைத் தந்தோன்
முனைவராய் முகிழ்த்த முந்தையா சிரியர்
அனைவரும் ஏத்தும் அருளுடைத் தேவே!
திருவேங் கடவா! தேவனே! மங்களம். 14

திருவேங்கடவன் மங்கள வாழ்த்து முற்றிற்று.

ஆரவே: முழுவதும். 10

தொடை: மாலை. படை: ஆயுதம். நானிலம்: உலகம். 11

பாங்கர்: அருகில். 12

முனைவராய்: தலைமையுடையாராய். முகிழ்த்த: தோற்றுவித்த. 14

பாட்டு முதற்குறிப்பு

பாட்டுமுதல்	பக்கம்	பாட்டுமுதல்	பக்கம்
அங்கண்மா	11	இன்னிசை	30
அங்கம் அனைத்தும்	65	உங்கள்	7
அண்ணமலையான்	27	உங்கையில்	28
அதுபழச்சுவை	32	உந்துமத	9
அத்திரி	46	எண்ணில்	55
அந்தரத்து	40	எல்லா	45
அப்பொழுது	59	எல்லே	8
அம்பரமே	9	எழுகோவிந்தா	45
அரவிந்தக்	46	ஏதம் இல்	41
அரன் அயன்	61	ஏலம்	53
அரியே	57	ஏழையன்	63
அருகே	48	ஏற்ற	11
அருணன்	29	ஐம்முகன்	46
அருபரம் நி	60	ஒருத்தி	13
அருபரம்பொ	66	ஒள்ளித்தில	20
அருளார்	67	ஒன்பது	19
அழிவிலி	65	ஓங்கி	2
அனைத்தும்	66	ஓர்ஒருகால்	26
அனைத்துலகும்	58	கடிமலர்	41
அன்பொடு	61	கதிரவன் எழுந்	53
அன்றுஇவ்	12	கதிரவன்குண	37
அன்னே	22	கதிரவன்தோழி	48
ஆடற்கிளிகள்	47	கமலைக்குய	55
ஆதியும்	19	கமலைநாதா	58
ஆயர்மங்கையர்	48	கருடன்	50
ஆர்த்த	24	கறவைகள்	14
ஆழிமழைக்	2	கற்றுக்	6
இந்திரன்	50	கனைத்து	6
இரவியர்	39	காதார்	25
இன்ஒலி	47	காமன்செருக்	23
இன்குழல்	56	காலக்கடை	66
இன்முகன்	56	கீசுகீசு	4

பாட்டுமுதற் குறிப்பு (தொடர்ச்சி)

பாட்டுமுதல்	பக்கம்	பாட்டுமுதல்	பக்கம்
கீழ்வானம்	4	பப்பற	31
குத்துவிளக்கு	10	பரமாம்	67
கூடாரை	14	பற்பநாபா	22
கூவின	30	பாசம்	19
கொழுங்கொடி	37	பாதாளம்	23
கோசலை	45	பாரதப்போரில்	62
கோபுர	49	பிரமன்	54
கோரும்	49	புலம்பின	39
கோழி	22	புள்ளின்	7
சான்புகுவோர்	63	புள்ளும்	3
சிறிதே	47	புவியில்	33
சிற்றஞ்சிறு	15	பூதங்கள்	31
சுடரோன்	51	பைங்குவளைக்	25
சுடர்ஒளி	38	போற்றி அரு	28
செங்கண்	27	போற்றி என்	29
திருப்பதி	50	மலராள்	65
திருமகள் காத	65	மணவாளமாமுனி	67
திருமகள் நிலை	54	மங்களம்	67
திருமகள்மண்	52	மாயனை	3
திருவா	59	மாரிமலை	12
திருவேங்கடமலை	65	மார்கழி	1
திருவேங்கடவாதிருப்	64	மால்அறியா	21
திருவேங்கடவா திருமிகு	55	மலைமணி	13
தூமணி	5	மானே நீ	21
நல்அணி	67	மிகஎழில்	66
நற்துணம்	64	மீனுடன்	53
நாயகனாய்	8	முத்துஅன்ன	20
நான்முகன்	55	முந்திய	32
நிலமகள்	61	முப்பத்து	10
நிலமாமகள்	56	முன் இக்	26
நோற்றுச்	5	முன்னைப்	23
பதுமநாபா	60	மேட்டுஇள	38

பாட்டு முதற்குறிப்பு (தொடர்ச்சி)

பாட்டுமுதல்	பக்கம்
மொய்ஆர்	24
வங்கக்கடல்	15
வம்பவிழ்	40
வாடாமலராம்	63
விண்ணகத்	33
விண்ணுலகு	51
விட்ணுவே	62
விருப்பாய்	57
விழையும்	56
வேங்கடநாதனின்	57
வேங்கடநாதனை	54
வையத்து	1

எமது நல்வாழ்த்துக்கள்

தி செளத் இந்தியா பிரஸ், காரைக்குடி.